Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-73 மாசி, 2024 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00




## 32 கால கொடும் சிறையும் மரணமும்!

## ஈழத்தாய்மார்களின் கண்ணீருக்கு விடிவு இல்லையா?

- தமிழ்மக்கள் ஒரு பலமான மையமாக இருக்கிறார்களா?
- மக்களாட்சி தத்துவத்தில் கிராம அபிவிருத்தி சங்கங்களே முதன்மையானது
- இசை நிகழ்ச்சிகளும் நிகழ்ச்சி நிரல்களும்

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# மக்களாட்சி தத்துவத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களே முதன்மையானது



செல்வின்

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பெயரளவில் ஏதோ ஒரு சில விடயங்களை செய்து கொண்டிருக்கின்றார்கள். அல்லது சிக்கனக் கடன் விடயங்களை செய்கின்றார்கள். அது மட்டும் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு உரிய பணி அல்ல. ஒட்டுமொத்தமாக ஒரு கிராமத்தின் அபிவிருத்தி அந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பாகும். கிராமத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி என்றால் எல்லா சமூகங்களின் அபிவிருத்தியையும் சங்கங்கள் பார்க்க வேண்டும். கையாள வேண்டும். அந்தளவுக்கு தங்களுடைய பணிப் பரப்பை விஸ்தரிக்க வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது சரத்தின்படி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் திணைக்களம் மாகாணசபைகளின் கீழ் முழுமையாக கையளிக்கப்பட்டிருக்கிறது. எனவே மாகாண சபையினுடைய அதிகார வரம்பிற்குள்தான் அந்த கிராம அபிவிருத்தி என்கிற விடயம் முழுமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே நாங்கள் யாருக்காகவும் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தற்போதைய விதி சொல்கின்றது, ஒரு கிராமத்தில் இருக்கின்ற ஆக குறைந்தது 50 வீதமான மக்கள் அதில் அங்கத்தவராக வேண்டுமென்று. ஆனால் அது நடைமுறையில் காணப்படவில்லை. பல கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஏதோ மாதத்திற்கு ஒருமுறை கூடி கதைத்து அறிக்கை எழுதுவதில் மட்டும் இருக்கின்றன. அவர்களுக்கு சமூகத்தை தலைமை தாங்கி நடத்துவதற்கான பயிற்சியும் கொடுக்கப்படவில்லை.

அதேபோன்று ஏற்கனவே கட்டியெழுப்பப் பட்ட இறுக்கமான பணித்துறை ஆட்சி என்று சொல்லப்படுகின்ற நிர்வாகிகளின் ஆட்சி அவர் களுக்கு இடம் தரவும் இல்லை. ஒவ்வொரு கிரா மத்திலும் இன்று கிராம சேவகர் தான் முதன் மையான ஆளாக இருக்கின்றார். ஆனால் உண் மையில் ஒரு மக்களாட்சி தத்துவத்தில் கிராம சேவகரை விட கிராம அபிவிருத்திச் சங்கம் தான் முதன்மையானதாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். அந்த கிராமத்தை பற்றி எல்லா விட யங்களிலும் கிராம அபிவிருத்திச் சங்கம் தான் முதன்மை பாத்திரம் வகிக்க வேண்டும். அந்த கிராமத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் குறிப்பாக பல்வேறு துறைகளில் உத்தியோகங் களை செய்கின்றவர்கள் கட்டாயமாக கிராம அபிவிருத்திச் சங்கத்தில் அங்கத்தவராகி அதற் குரிய பொறுப்புகளை ஏற்று நடத்த வேண்டும். மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் பெரும்பாலான இடங்களில் அரசாங்க உத்தி யோகத்தர்கள் இந்த விடயங்களுக்கு வருவதே இல்லை. தங்களுக்கு நேரமில்லை என்று பொறு ப்புகளை எடுக்க தயங்குகின்றார்கள். ஏதோ ஒருவகையில் கிராமத்தின் பொறுப்புகளில் இருந்து தப்பித்து போக முயற்சிக்கின்றார்கள். அதனால் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மிக வும் பலவீனப்பட்டு போயிருக்கின்றன.

சமூகத்திலுள்ள கற்றவர் அத்தனை பேரும், வசதி வாய்ப்புள்ள அத்தனை பேரும் சேர்ந்து இந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களை பொறுப்பேற்று நெறிப்படுத்தி தலைமை தாங்கி நடத்த வேண்டும். ஒட்டுமொத்த கிராமத்தினு டைய அபிவிருத்தி என்பது கிராம அபிவிருத்திச் சங்கத்தால் தான் தீர்மானிக்கப்படும். அதற்கான வள ஒதுக்கீடுகளை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அத்தீர்மானங்களை பிரதேச செயல கங்களுக்கு அனுப்பியும் சரி, மாவட்ட செயலக ங்களுக்கு அனுப்பியும் சரி, மாகாண செயலக ங்களுக்கு அனுப்பியும் சரி அவற்றை நடைமு றைப்படுத்துவதற்கான வழிகளை தேட வேண் டும்.

ஆனால் இப்போது ஒரு கிராமத்தின் விபர ங்களை கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கேட் டால் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் எதுவுமே இல்லை. அந்த இடத்தில் கிராம சேவகர் தான் ஒரு தனியுரிமை கொண்டவராக இருக்கின்றார். அவரிடமும் கிராமம் பற்றியதான முழுமையான தகவல்களை எடுப்பதற்கான வாய்ப்பு இல்லை. அவர் அரசாங்கத்தின் கட்டளைகளையும் அரசா ங்கத்தின் விடயங்களையும் கையாளுகின்ற ஒரு அலுவலகராக தான் இருக்கின்றார். அதை செய்து முடிக்கவே அவருக்கு சிரமமாக இருக்கின்றது. அதை விட மோசமாக இப்பொழுது அவருக்கு மேலதிகமாக நான்கைந்து பட்டதாரிகள் அவரு க்கு அபிவிருத்தி உதவியாளர்களாக இணை ந்து இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் எல் லோரும் கிராமத்தை என்ன செய்கிறார்கள்? உண் மையில் இந்த அபிவிருத்தி உதவியாளர்கள் எல்லோரும் கிராம அபிவிருத்திச் சங்கத்தோடு இணைக்கப்பட வேண்டும்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முத ன்மை பாத்திரம் வகிக்க வேண்டும். எப்படி கிராமத்தை முன்னுக்கு கொண்டு போவது என் பது தொடர்பில், தன்னுடைய மக்களை எப் படி வளப்படுத்தி பாதுகாப்பது என்பதை கிரா மம் தீர்மானிக்க வேண்டும். அதற்கு கிராம அபி விருத்திச் சங்கம் தான் பொறுப்பு. அந்த கிரா மத்தில் ஒருவர் பட்டினியால் வாடினால், ஒரு குடும்பம் வறுமையில் சிக்குப்பட்டால், யாரா வது ஒரு குழந்தை போசாக்கின்மையால் நோய் வாய்ப்பட்டால், ஒரு முதியவர் அனாதையாக இறக்க வேண்டி வந்தால் அந்த சமூகம் தான் பொறுப்புக் கூற வேண்டும். அந்த சமூகம் சார்ந்து கிராம அபிவிருத்திச் சங்கம் தான் இந்த விடயங்களை கையாண்டிருக்க வேண் டும். அவர்கள் தான் கூட்டுப்பொறுப்பு. இதனை கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு நாங்கள் புரிய வைக்க வேண்டும்.

எங்களுடைய கிராம அபிவிருத்தித் திணைக்களம் தன்னுடைய பார்வையை அகல விரிக்க வேண்டும். தன்னுடைய பணிகளை விஸ்தரித்து விரிவாக்க வேண்டும். இவ்வாறு கிராம அபிவிருத்திச் சங்கம் முதன்மை பாத்திரம் எடுக்குமாக இருந்தால் கிராமத்தில் உள்ள வள ங்கள் யாவும் பாதுகாக்கப்படும். கிராமத்திலு ள்ள வளங்கள் உச்ச பயன்பாட்டிற்கு உட்படுத்த ப்படும். சமூகத்திற்குள் அறிமுகமில்லாத அந் நியர்கள் வந்து போதைப்பொருள் விற்பனை செய்வதற்கும் நுண்கடன்கள் போன்ற விடயங் களை கொடுத்து மக்களை ஏமாற்றுவதற்கும்

(16ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

## ஆசிரியர் பார்வை

### வடக்கு மீனவர்களின் வாழ்வாதார அழிப்புக்கு எப்போது முற்றுப்புள்ளி?

இந்திய இழுவைப்படகுகளால் இலங்கையின் வடக்கு மீனவர்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இரு நாட்டு அரசாங்கங்களும் இந்த பிரச்சினையை தீர்ப்பதில் உண்மையான அக்கறையைக் காட்டவில்லை. இந்திய இழுவைப்படகுகளால் எமது கடல் வளம் அடியோடு துடைத்தழிக்கப்பட்டு எமது மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் பெரும் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

கடந்த நான்கு தசாப்தங்களாக இடம்பெற்ற போரினால் எமது மீனவ சமூகத்தினர் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். போர் நடந்த காலத்தில் கடலில் சில மீற்றர்களுக்குள்ளே தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அதுவும் போர் இடம்பெற்ற காலங்களில் கடலுக்குள் இறங்கவே முடியாமல் தடை செய்யப்பட்டனர். சிறீலங்கா கடற்படையால் வெட்டியும், குத்தியும், சுட்டும் கொன்ற மீனவர்கள் தொகை ஏராளம். இவ்வாறு பல்வேறு வலிகளையும் அனுபவித்து உயிரைக் காப்பாற்றி வாழ்ந்து வந்த மீனவ சமூகத்தினர் இன்று தமிழ் நாட்டில் இருந்து வந்து எல்லை தாண்டி சட்ட விரோத இழுவை மடிகளை பயன்படுத்தி மீன் பிடிக்கும் மீனவர்களால் பெரும் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர். எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகளால் வாழ்வாதாரத்தை இழந்தது போக இன்று இந்திய மீனவர்களின் ஊடுருவலாலும் தொழிலுக்கு செல்ல முடியாமல் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் எமது மீனவ சங்க பிரதிநிதிகள் பல்வேறு தடவைகள் ஊடக சந்திப்புகளை வைத்து தெரியப்படுத்தியும், கைதாகும் தமிழ்நாட்டு மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுத்தாலும் அவர்களது ஆக்கிரமிப்பை நிறுத்த முடியவில்லை.

இந்த விடயத்துக்கு உறுதியான தீர்வை காண வேண்டுமென்றால் ஒரே மொழி பேசும் இரண்டு தரப்பு மீனவர்களும் நேரடியாக பேச வேண்டும். இதற்கு சிவில் சமூக அமைப்புகள் தளம் அமைத்துக் கொடுக்கலாம். இலங்கையின் வடக்கு மீனவர்களும் தமிழ் நாட்டு மீனவர்களும் தொடர்ச்சியான உரையாடல்களை மேற்கொண்டு இரு தரப்புக்கும் பொருத்தமான வழிமுறைகளை கண்டடைந்து அதனை இறுதி ஆவணமாக்கி இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் வழங்கலாம். அதன் பின்னரும் இரு நாட்டு அரசுகளும் தலையிடாவிட்டால் எமது அரசியல் தரப்புகள் உரிய அழுத்தத்தை வழங்கி இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

அனேகமாக பாரம்பரிய முறைகளை பயன்படுத்தி மீன்பிடிக்கும் எமது மீனவர்களின் நிலையோ பெரும் பரிதாபம். இந்நிலையில் தான் இந்திய ரோலர்கள் எமது பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து எமது மீன்வளங்களை அடியோடு அபகரித்து செல்கின்றனர். இதற்கெதிராக எமது மீனவர்கள் பல்வேறு உறுதியான போராட்டங்களை பலகாலமாக முன்னெடுத்து வருகின்றனர். இதற்கு விரைவில் தீர்வு வழங்கப்படுவது அவசியமல்லவா?

-செ. கிரிசாந்-

# 32 கால கொடும் சிறையும் மரணமும்!
# ஈழத்தமிழர்களின் கண்ணீருக்கு விடிவு இல்லையா?



துருவன்

**இ**ந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து நீதிமன்றால் விடுவிக்கப்பட்டிருந்த பொழுதும் மீண்டும் அதனை விட கொடுமையான தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா என்ற இயற்பெயரைக் கொண்ட சாந்தன் கடந்த 28 ஆம் திகதி சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் கல்லீரல் செயலிழப்பால் உயிரிழந்தார்.

இதன்மூலம் மீண்டும் இந்தியா ஈழத்தமிழர்கள் மீதான தன் கோரமுகத்தை வெளிக்காட்டியுள்ளது. இவர்களது விடுதலைக்கு எதிராக நீதிமன்றில் இந்திய மத்திய மாநில அரசுகள் கடுமையாகவே எதிர்வினையாற்றின. இலங்கை அரசும் பாராமுகமாகவே இருந்தது. இறுதியாக மரணத்தின் போதும் நீதிமன்றம் தலையிட்டு தான் ஏன் இவ்வளவு தாமதிக்கிறீர்கள் என்று கேட்டு உடலத்தை அனுப்ப விரைவுபடுத்தியது.

கடந்த 2022 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி 30 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின் சாந்தன் இந்திய உயர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட போதிலும் அவர் மீண்டும் சிறையை விடவும் கூடுதல் நெருக்கடியை தரக் கூடிய திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் 2022 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆம் திகதி அடைக்கப்பட்டார். அவருடன் சேர்த்து ஏற்கனவே விடுதலையான ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், முருகன் ஆகியோரும் அங்கு அடைத்து வைக்கப்பட்டனர்.

இவர்கள் இலங்கையர்கள் என்பதால் வெளிநாட்டு சட்டவிரோத குடியேற்றம் தொடர்பிலான ஆவணங்கள் தேவையென சுட்டிக்காட்டி சிக்கல்களில் சிக்க வைக்கப்பட்டே மீண்டும் சிறையை விடவும் கொடுமையான உடல், உள

நெருக்கடிகளை தரக் கூடிய தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். தற்காலிக பயண ஆவணங் களை வழங்கி தங்களை விரும்பும் நாடுகளு க்கு அனுப்பி வைக்க வேண்டும் என்கிற கோரி க்கை நால்வராலும் பல தடவைகள் மத்திய மாநில அரசுகளை நோக்கி வைக்கப்பட்ட போதும் அது நிராகரிக்கப்பட்டது. தன்னை தடு ப்பு முகாமிலிருந்தும் விடுவிக்கக் கோரி 2023 ஆம் ஆண்டு மத்திய, மாநில அரசாங்கங்க ளுக்கு சாந்தன் பல கடிதங்களைத் தொடர்ச்சி யாக அனுப்பிய போதும் முறையான பதிலளிப் புக்கள் காணப்பட்டிருக்கவில்லை.

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டாலும் சிற ப்பு முகாமில் அவர்களுக்கு சுதந்திரமாக நட மாடும் அனுமதி மறுக்கப்பட்டது, உரிய மரு த்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை, நடைப்பயிற்சி செய்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது, சரியான உணவும் வழங்கப்பட வில்லை, நண்பர்கள் உறவினர்களை சந்திப்பத ற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில் நான்கு சுவர்களுக்குள் முடக்கப்பட்ட தனிமை வாழ்வு தான் சாந்தனின் உடல் நிலை கொஞ் சம் கொஞ்சமாக பாதிக்கப்பட காரணமாகியது. ஏற்கனவே இலங்கை திரும்புவதற்கு அனுமதிக்க கோரி சென்னை உயர் நீதிமன்றில் சாந்தன் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இதேவேளை சாந்தனின் தாயாரும் இலங்கை வெளி விவ கார அமைச்சுக்கு பல கடிதங்களையும் எழுதியு ள்ளார். இந்த விடயத்தில் இலங்கை இந்திய தரப்புகள் பாராமுகமாகவே இருந்துள்ளன.

ஆனால், கடந்த 23 ஆம் திகதி இந்திய மத்திய அரசின் வெளிநாட்டு விவகாரங்களை கையாளும் பிரிவினரால் பயண அனுமதி வழ ங்கப்பட்ட போதிலும் சாந்தனுக்கு ஏற்பட்ட நோயின் தன்மை தீவிரமடைந்துள்ளது. உரிய மருத்துவக் கவனிப்பின்றி தடுப்பு முகாமில் இருந்த சாந்தன் நடக்க கூட இயலாத நிலை வரும் போது தான் திருச்சியில் உள்ள மகா த்மா காந்தி நினைவு மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார். மேலும் அவரது உடல்நிலை மோசம டையவே கடந்த 27 ஆம் திகதி சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி மருத்துவமனைக்கு மாற் றப்பட்டார். இந்நிலையில் கடந்த 28 ஆம் திகதி காலை 7.50 மணியளவில் அவர் மாரடைப்பால் உயிரிழந்ததாக மருத்துவமனை வட்டாரத்தால் தகவல் வெளியிடப்பட்டு இருந்தது.

எனது பிள்ளை இங்கே வந்து என்னிடம் சிறிது காலம் வாழ வேண்டும். அவனுக்கு ஒரு பிடி சோறாவது ஊட்டி விட வேண்டும் என பல் வேறு கடவுளர்களிடமும் வேண்டுதல்களை செய்த சாந்தனின் தாயாரான மகேஸ்வரி மற் றும் சகோதர சகோதரிகள், உறவுகள், நண்பர் கள் அனைவரும் துடித்துப் போயுள்ளனர்.

சாந்தனின் இறப்புக்கு இந்தியாவின் மத் திய மாநில அரசுகளும் தமிழ் தலைமைகளும் பொறுப்பேற்க வேண்டும் என குரலற்றவர்க ளின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் குற்றம் சாட்டியுள்ளார். எல்லை தாண்டி எங்களது கடற்பரப்புக்குள் வந்து சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர் களை ஒரே இரவில் பேச்சுவார்த்தை நடாத்தி விடுவிக்க முடியும் என்றால் ஏன் இவர்களை விடுவிக்க முடியாது என்று அவர் கேட்டுள்ளார்.

**நீதிமன்றால் விடுவிக்கப்பட்டாலும் அன்று நடந்தேறியது அப்பட்டமான சிறை மாறுதல் தான், இது சிறையல்ல சிறையை விட கொடு ஞ்சிறை என ராபர்ட் பயஸ் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து கடிதம் எழுதியுள்ளார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு.**

32 வருட நீண்ட சிறைக் கொட்டடிக்கு பிறகு கடந்த 11-11-2022 அன்று உச்ச நீதிமன் றம் விடுதலை செய்த ஆறு பேரில் நானும் ஒரு வன். அந்த ஆறு பேரில் நான், ஜெயக்குமார், முருகன் மற்றும் சாந்தன் ஆகிய நால்வரையும் இலங்கைத் தமிழர் எனக் காரணம் கூறி இந்திய வெளியுறவுத்துறை நாட்டை விட்டு வெளியே அனுப்பும் வரை சிறப்பு முகாமில் அடைத்து வைக்க உத்தரவிட்டது. தொலைந்து போன வாழ்க்கையை எதிர்நோக்கி 32 வருட நீண்ட காத்திருப்பு முற்று பெறும் தருவாயில் கூட விடு தலையை ருசிக்க முடியாமல், சிறிது நேரம் கூட விடுதலைக் காற்றை சுவாசிக்க முடியாமல் புழல் சிறையிலிருந்து நானும் ஜெயக்குமாரும் வேலூர் சிறையிலிருந்து சாந்தனும் முருகனும் திருச்சி சிறப்பு முகாமிற்கு கொண்டு வந்து அடைக்கப்பட்டோம்.

இதோ முடியப்போகிறது 32 ஆண்டுக்கால சிறைக் காத்திருப்பு என்று எண்ணிய எங்க ளுக்கு அப்பொழுது விளங்கவில்லை நாங்கள்

> சிறப்பு முகாமோ சிறையை விட கொடுமையானது. எந்த சட்டதிட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும், மாவட்ட ஆட்சியரும், முகாம் நிர்வாகமும் என்ன நினைக்கிறதோ அவையெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டத்திட்டங்களாகவும் ஆகின்றன. மருத்துவம் கிடையாது என்று முடிவெடுத்தால் முகாம்வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது. தனிமைச் சிறை என்று முடிவெடுத்தால் தனிமைச் சிறை. யாரும் வந்து பார்க்கக் கூடாது என்று இவர்கள் முடிவெடுத்தால் யாரும் வந்து பார்க்க முடியாது

சிறை மாற்றப்படுகிறோம் என்று. ஆம், அன்று நடந்தேறியது அப்பட்டமான சிறை மாறுதல் தான் என்பதை எங்களுக்கு காலம் தான் விளக்கியது. இது சிறையல்ல சிறப்பு முகாம் தானே என்று எண்ணிய எங்களுக்கு இது சிறையல்ல சிறையை விட கொடுஞ்சிறை என்பதுவும் எங்களுக்கு போகப்போகத் தான் விளங்கியது. நாட்டை விட்டு அனுப்பும் வரை எங்களை சிறப்பு முகாமில் வைக்கிறோம் என்றவர்கள் இன்றைய தேதிவரை நாட்டை விட்டு அனுப்புவதற்கு எடுத்த முன்னெடுப்புகள் என்னவென்று கேட்டால் மிகப்பெரிய கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியும் தான் மிஞ்சும். “சிறப்பு முகாமா..? அது சிறை மாதிரி எல்லாம் இல்லை. எல்லா வசதிகளும் செய்து கொடுப்போம்” என்று பேசி சமாளிக்கும் அரசும் நிர்வாகமும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 2 உயிர்களை பலி வாங்கியிருக்கிறது.

கடந்த ஜனவரி 28 ஆம் தேதி ஒரு வார காலமாக மருந்து மாத்திரை கிடைக்காமல் ஒருவர் இறந்து போனார். இப்பொழுது சாந்தன் கல்லீரல் முழுவதும் செயலிழந்து, எழுந்து நிற்கக் கூட முடியாமல் மிக மோசமடைந்து பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவம் ஏதும் பலனளிக்காத நிலையில் இறந்து போயிருக்கிறார். இந்த மரணத்திற்கு யார் பொறுப்பேற்பது? யாரை நாங்கள் நொந்து கொள்வது? அனைத்து அடிப்படை உரிமைகளையும் மறுத்து, உடல்நலன் குன்றி விடுதலை ஆகிவிடுவோம். என்று கனவு கண்டு விடுதலை ஆகிவிட்டோம் என்று பூரிப்பு கிடைத்த தருவாயில் மீண்டும் ஏமாற்றப்பட்டு சிறை மாற்றப்பட்டு இதனால் மனநலனும் பாதிக்கப்பட்டு இறந்து போன சாந்தனுக்கு சிறை வாழ்வு முடிந்தது.

இன்னும் மீதம் மூன்று பேர் இருக்கிறோம். நாங்கள் மீண்டும் காத்திருக்க தொடங்குகிறோம் இந்த சிறப்பு முகாமில். சிறையில் கூட நிர்வாகத்திற்கு சிறை விதிகள் கையேடு இருக்கிறது. அதன்படி கைதிகளுக்கு இருக்கக் கூடிய மற்றும் இல்லாத உரிமைகள் கடமைகள் வரையறுக்கப்பட்டு இருக்கும். ஆனால் சிறப்பு முகாமோ சிறையை விட கொடுமையானது. இங்கு எந்த சட்டதிட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும், மாவட்ட ஆட்சியரும், முகாம் நிர்வாகமும் என்ன நினைக்கிறதோ அவையெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டதிட்டங்களாகவும் ஆகின்றன. மருத்துவம் கிடையாது என்று இவர்கள் முடிவெடுத்தால் முகாம்வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது. தனிமைச் சிறை என்று இவர்கள் முடிவெடுத்தால் தனிமைச் சிறை. யாரும் வந்து பார்க்கக் கூடாது என்று இவர்கள் முடிவெடுத்தால் யாரும் வந்து பார்க்க முடியாது. இப்படியான நிர்வாகம் தான் இங்கு இருக்கிறது. நாட்டை விட்டு வெளியில் அனுப்புவதற்காக என்று காரணம் கூறி சிறப்பு முகாமில் அடைக்கப்படுபவர்கள் அதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படாமல் வருடக் கணக்கில் அப்படியே கிடப்பில் போடப்பட்டு இன்னொரு சிறைவாசத்தை அனுபவித்து வருகின்றனர்.

நாங்கள் சிறுசிறு அடிப்படைத் தேவைகளையும் மற்றும் அடிப்படை உரிமைகளையும் கூட போராடி, உயிரைக் கொடுத்து பெற வேண்டிய சூழலே இருக்கிறது. எங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியான 32 வருடங்கள் ராஜீவ்காந்தி பெயரைச் சொல்லியே சிறையில் கடத்தப்பட்டது. இறுதியில் உச்ச நீதிமன்றத்தின் விடுதலை ஆணைக்கு பின்னும் எங்களை எங்கள் குடும்பங்களோடு அனுப்பி

வைக்க நடவடிக்கை எடுக்காமல் காலங் கடத்தி காலங்கடத்தி இறுதியில் சாந்தனை இழ ந்து நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மீதமுள்ள நாங்களும் எங்களுக்கான ஒவ்வொரு அடிப்படை உரிமையையும் பெறுவதற்கு இது வரை எண்ணற்ற மனுக்களையும், வழக்குக ளையும், உண்ணா நிலை போராட்டங்களை யும் மேற்கொண்டே பெற்று வருகின்றோம். அதில் பெரும்பான்மையான வாக்குறுதிகள் காற் றிலே போகும். மீதி, கேட்கப்படாமலே மக்கிப் போகும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டு மானால், இந்த மாத தொடக்கத்தில் இல ங்கை துணைத் தூதரகம் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நானும் முருகனும் உண்ணா நிலைப் போராட்டம் மேற்கொண்ட பொழுது ஒரு வாரத்தில் அழைத்துச் செல்கிறோம் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டு 20 நாட் களை கடந்தும் அது தொடர்பாக எந்த நடவ டிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப் பட்டிருக்கிறது. இவ்வாறில்லாமல் உரிய அரசுப் பொறிமுறைகளை கடைப்பிடித்து அவர்கள் கட மையை முறையே செய்திருந்தால் இன்று சாந் தன் உயிருடன் அவருடைய தாயாருடனும் குடும்பத்தினருடனும் மகிழ்ச்சியாக இன்னும் ஓரிரு வருடங்களாவது இருந்திருப்பார்.

33 வருடங்களாக தனது மகனை பிரிந்து கண் பார்வை குன்றி வயது முதிர்ச்சியடைந்து கடைசியாக ஒருமுறையாவது தனது மகனை பார்த்துவிட வேண்டும் என்று ஏங்கிய ஒரு தாயின் கையில் அந்த மகனின் உயிரற்ற உடலைத் தான் கொண்டு போய் சேர்க்கப் போகிறோம். கடைசியாக தனது கையால் தன் மகனுக்கு ஒரு பிடி உணவு கொடுக்க மாட்டோமா என்று ஏங்கிய அந்த தாய் அந்த மகனுக்கு கடை சியாக வாய்க்கரிசி கொடுக்கத் தான் வாய் க்கப்பட்டிருக்கிறார். இதோ இன்று தன் மகன் வந்துவிடுவான், என்று எதிர்பார்த்து காத்திருந்த அந்தத் தாயிடம் “உன் மகன் வரவில்லை. அவனின் உயிரற்ற உடல்தான் வருகிறது” என்கிற செய்தியை அந்தத் தாயிடம் யாரால் சொல்லியிருக்க முடியும். அத்தகைய கல் நெஞ்சம் படைத்த மனிதர்களும் இவ்வுலகில் வாழ்கிறார்களா என்ன. 33 வருடங்கள் கழித்து தன் மகனின் வருகைக்காக மகிழ்ச்சியாக காத்திருந்திருக்கும் அந்த வீட்டில் இந்த செய்தி ஏற்படுத்திய மயான அமைதியின் பேரி ரைச்சலை தாங்கிக் கொள்ளும் கனத்த இத யம் கொண்ட மனிதர்களும் இவ்வுலகில் இருக் கிறார்களா என்ன.

இதோ கடந்த மாதம் என்னுடன் நடந்து மருத்துவ பரிசோதனைக்கு வந்த சாந்தன் இன்று எங்களோடு இல்லை. ஒரு மாதத்தில், எங்களோடு உறவாடி, பேசி உலாவிய சாந்தன் இன்று உயிரோடு இல்லை. மீதமிருக்கிற, ஜெயக் குமாரும் முருகனும் 33 வருடங்களாக தங்கள் குடும்பங்களை பிரிந்து வாடுகிறார்கள். நானோ, மனைவி ஒரு நாட்டில் மகன் ஒரு நாட்டில் தாய், சகோதர சகோதரிகள் வேறு நாட்டில் என சிதறுண்டு சிதைந்து கிடக்கும் குடும் பத்தை ஒன்றுசேர்த்து ஒரு நாளேனும் வாழ் ந்து விடமாட்டோமா என்று ஏங்கிக் கொண்டி ருக்கிறேன். பச்சிளம் பாலகனாக பார்த்த எனது மகன் எவ்வளவு உயரம் இருப்பான்? அவன் என்னை விட உயரமா? அல்லது உயரம் குறைவா? அவனுக்கு திருமணம் ஆகி எனக்கு பேரன் பிறந்திருக்கிறானாம்.! நான் எந்த வயதில் என் மகனை பிரிந்தேனோ அந்த வயதில் என க்கு இப்பொழுது பேரன் இருக்கிறான். அவன துப் பஞ்சு பாதங்களை அள்ளியெடுத்து ஒரு முறையேனும் என் முத்தங்களை காணிக்கை யாக்கி விடமாட்டேனா?

அன்பார்ந்த உலகத் தமிழ் சமூகமே இன்னும் நாங்கள் மூன்று பேர் மிச்சம் இருக்கி றோம். நீண்டகால சிறைவாசமும், குடும்பங் களை பிரிந்த துயரமும் எங்களை முழுமை யான நோயாளிகளாக்கியுள்ளது. சாந்தனைப் போலல்லாமல் எங்களையாவது எங்கள் கடைசி காலத்தில் மிஞ்சியிருக்கிற கொஞ்ச காலம் எங் கள் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்துவிட்டுப் போக இந்த அரசுகள் இனியாவது நடவடிக்கை எடுக்குமா? எங்கள் குடும்பங்களை பிரிந்து வாழ்க்கையை இழந்து வாடும் இப்பெருந்துன்பங்கள் முடிவுக்கு வருமா?

**சாந்தன் இந்திய அரசின் வன்மத்திற்கு பலியாகியுள்ளார் என மே 17 இயக்கத்தின் நிறு வுனர் திருமுருகன் காந்தி தெரிவித்துள்ளார். சாந்தன் மரணம் குறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,**

“எது நடந்துவிடக் கூடாது என அச்சப்பட் டோமோ அது நடந்துவிட்டது. தோழர் சாந்தன்

இயற்கையெய்திய செய்தி துயரமான நாளாக்கி விட்டது. சுதந்திரக் காற்றை சுவாசிக்காமலும், தாயை சந்திக்காமலும் விடைபெற்றுள்ளார். வேலூர் சிறையில் அவரைச் சந்தித்துள்ளேன். துயரமும், அவநம்பிக்கையும் சூழ்ந்த நிலையில் மிக அமைதி தோய்ந்த அவரது முகம் நினைவில் என்றும் நிற்கும். 2018 ஆவணியில் சந்தித்த சமயத்தில் அன்றைய அ.தி.மு.க அரசின் முடிவால் விடுதலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. நாங்கள் வெளியே போய்விடுவோம், வெளியே உங்கள் உடல்நலம் பற்றி சொல்கிறோம் என்றார்"

**இது இயற்கை மரணமல்ல கொலை என தெரிவித்துள்ளார் அரசியல் ஆய்வாளர் சி.அ யோதிலிங்கம். அவர் மேலும் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,**

விடுதலை செய்யப்பட்ட ஒருவரை இன்னொரு சிறையிலே அடைத்து வைப்பது என்பது ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல. நீதிக் கோட்பாட்டுக்கு கூட முரணானது. இந்த விடயத்தில் தமிழக அரசு தான் கூடுதலான பாத்திரத்தை வகித்திருக்க வேண்டும். ஏனென்றால் தமிழக அரசினுடைய எல்லைக்குள் தான் இந்த விடயம் நடைபெற்று இருக்கிறது. சிறப்பு முகாமை நிர்வகிக்கின்ற பொறுப்பு தமிழக அரசினுடையதாக இருக்கும். அப்படியென்றால் தமிழக அரசு குறைந்தபட்சம் ஒரு திறந்தவெளி சிறை மாதிரியான ஒரு சூழலையாவது உருவாக்கி இருக்க வேண்டும். அந்த சிறப்பு முகாமினுடைய நெருக்கடி நிலை காரணமாகவே அவர் தொடர்ச்சியாகவே அறைக்குள் பூட்டி வைத்திருக்கப்பட்டார் என்றெல்லாம் கூறப்படுகிறது. அந்த தொடர்ச்சியான நிலை தான் அவரின் கல்லீரல் நோய் வரக் கூடிய சூழலை உருவாக்கி இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதிலும் கூட தொடர்ச்சியான ஒரு மருத்துவ கவனிப்பு இருந்திருக்குமாக இருந்தால் இந்த மரணத்தை தவிர்த்திருக்கலாம். மொத்தத்தில் இந்த மரணம் ஒரு தவிர்த்திருக்க கூடிய மரணம்.

இந்த மரணத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் பலர் இருக்கின்றார்கள். முதலாவது, இந்திய அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டிய ஒரு விடயம். விடுதலை செய்த பின்னர் இலங்கைக்கு அனுப்புவதற்கான ஒழுங்கை இலங்கை அரசாங்கத்துடன் பேசி செய்திருக்கலாம். அவர்கள் அதை செய்யவில்லை. இரண்டாவது, தமிழ்நாட்டு அரசாங்கம். இவர்களுக்கு இரண்டு பொறுப்புகள் இருக்கின்றன. ஒன்று சிறப்பு முகாமில் சாந்தன் வைக்கப்பட்டிருக்கும் போது அவரை முழுமையாக பொறுப்பு எடுத்திருக்க வேண்டும். அவருடைய மருத்துவ கவனிப்புகள், அவருடைய உணவு கவனிப்புகள் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவை ஒன்றையும் செய்யவில்லை. மத்திய அரசுக்கு மாநில அரசு ஒர் அழுத்தத்தை கொடுத்திருக்க வேண்டும். அவரை இலங்கைக்கு அனுப்புவதற்காக அழுத்தங்கள் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. ஆகவே இதில் தமிழ்நாட்டு அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது.

மூன்றாவது, இலங்கை அரசுக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. இலங்கை அரசு தன்னுடைய பிரஜை என்ற வகையில் அவரை இலங்கைக்கு அழைப்பதை துரிதப்படுத்தி இருக்கலாம். ஆனால் இலங்கை அரசும் அதனை செய்யவில்லை.

நான்காவது, எங்களுடைய தமிழ் அரசியல் தலைமைகள். தமிழ் அரசியல் தலைமைகள் இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் அது தொடர்பான அழுத்தங்களை கொடுத்திருக்க வேண்டும். தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு கூட அழுத்தங்களை கொடுத்திருக்க வேண்டும். இவ்வாறு எதுவுமே கொடுக்கப்படாமல் நடந்திருக்கிறது.

எல்லாவற்றையும் தொகுத்து பார்க்கையில் இதனை ஒரு இயற்கையான மரணம் என்று சொல்வதை விட ஒருவகையான கொலை என்று தான் கூற வேண்டும். ஆகவே இதற்கான பொறுப்புகளை சம்பந்தப்பட்ட தரப்புகள் ஏற்றே ஆக வேண்டும்.

சாந்தன் தன்னுடைய சொந்த விவகாரம் தொடர்பாக இந்த நெருக்கடிக்கு உள்ளாகவில்லை. தமிழ் மக்களினுடைய பொது பிரச்சனையான இனப் பிரச்சனையில் பங்குபற்றியதால் தான் அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஆகவே அவர் ஒரு மாவீரராக கருதப்பட வேண்டிய ஒருவர். ஆகவே அவருக்கு உரிய கௌரவத்தை கொடுக்க வேண்டிய பொறுப்பு

தமிழ் மக்களுக்கு இருக்கிறது. ஆகவே அவருடைய சடலம் இங்கு வருகின்ற போது அதற்குரிய கௌரவத்தை கொடுப்பதற்கு இங்குள்ள அரசியல் தலைமைகள், சமூக நிறுவனங்கள் எல்லாம் தயாராக இருக்க வேண்டும்.

இது போன்ற நிலைமை ராஜீவ்காந்தி கொலை சந்தேக நபர்களான ஏனையோருக்கும் வராத நிலையில் அவர்களை பாதுகாப்பாக கொண்டு வருவதற்கான முயற்சிகளை தமிழ் அரசியல் தலைவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தங்களை கொடுத்து கொண்டு வர வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியில் உள்ள ஈழத் தமிழர்களுக்கான சிறப்பு முகாம் ஒருவகையில் ஒரு வதை முகாமாக தான் காணப்படுகிறது. போரும் இல்லாத சூழலில் இவ்வாறான ஒரு வதை முகாம் தேவையா என்ற ஒரு கேள்வியும் வருகின்றது. அரசாங்கத்தினுடைய சிறைகளை பொறுத்தவரையில் அவற்றுக்கென்று சில ஒழுங்கு விதிகள், கட்டுப்பாடுகள் எல்லாம் இருக்கும். ஆகவே அவர்கள் அந்த ஒழுங்கு விதி கட்டுப்பாட்டுக்குள் செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கும். சட்ட ரீதியாக கேள்வி எழுப்புவதும் இலகுவானது. ஆனால் சிறப்பு முகாமை பொறுத்தவரையில் அப்படி கேள்வி எழுப்புவது கூட பல நெருக்கடிகளை கொண்டு வரக் கூடிய சூழல் இருக்கின்றது. ஆகவே இந்த சிறப்பு முகாமை இல்லாமல் செய்வது தொடர்பாக தமிழகத்திலுள்ள தமிழ் ஆர்வலர்கள், அரசியல் சக்திகள் அதற்கான முயற்சிகளை செய்வதும் இங்கே இருக்கின்றவர்கள் அதற்கான அழுத்தங்களை கொடுப்பதும் பொருத்தமானதாக இருக்கும்.

---

(15ஆம் பக்க தொடர்ச்சி)

றால் அதையும் முன்வைக்கலாம். உச்ச கோரிக்கையை முன்வைத்து அதற்குரிய மக்கள் ஆணையை அவர் அங்கு பெறலாம். அவ்வாறு பெற்றால், ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளருக்கு விழுகின்ற வாக்குகள் ஒரு மறைமுக பொது வாக்கெடுப்பாக கணிக்கப்படும். அது தமிழ் மக்களின் ஆகப் பிந்திய ஆணையாகவும் கணிக்கப்படும். தமிழ் பொது வேட்பாளர் வெல்ல மாட்டார், ஆனால் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மிக உறுதியான கூர்மையான ஆணையை அவர் வெளிக்கொண்டு வர முடியும். அதைவிட முக்கியமாக அந்த வேட்பாளர் தமிழ் மக்களின் அனைத்து பிரச்சனையையும் சர்வதேசமயப்படுத்துவார். அதைவிட முக்கியமாக அவர் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்ட முடியும். அதற்கான தகுதி உள்ள ஒருவரை கொண்டு வர வேண்டும். அவர் தமிழ் மக்களை ஒரு திரட்சிக்குள் கொண்டு வருவார்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் இராஜபக்சக்களுக்கு எதிராக தான் வாக்களித்து இருக்கிறார்கள். ஆனால் பொது தேர்தல்களில் வெவ்வேறு கட்சிகளுக்கு வாக்குகள் சிதறி இருக்கின்றன. ஒப்பீட்டளவில் தமிழ் மக்களின் வாக்குகள் திரட்சியாக விழுந்த இடம் இராஜபக்சவிற்கு எதிராக. எனவே இராஜபக்சவிற்கு எதிராக விழுகின்ற வாக்கை நாங்கள் ஒரு தமிழ் கோரிக்கைக்கான வாக்காக மாற்றினால் என்ன? அல்லது சிங்கள கட்சி ஒன்றுக்கு போகக் கூடிய வாக்கை வெறுமையாக கொடுக்காமல் அதை பேரத்தின் துருப்பு சீட்டாக பயன்படுத்தினால் என்ன? அந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவர் உச்சமான கோரிக்கையை வைக்க வேண்டும்.

தமிழ் மக்களின் ஆணையை பெறுவதற்கு அந்த தேர்தலை பயன்படுத்தலாம். எனவே இந்த ஆண்டை திட்டமிடுவது என்று பார்த்தால் அது தமிழரசு கட்சி தலைமை விடயம் தொடக்கம் ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் எப்படி எதிர் கொள்வது என்பது வரை ஒரு பொது முடிவாக எடுக்கலாம். அதேநேரம் ஒரு நீண்டகால திட்டமாக தமிழ் மக்கள் தங்கள் வெளியுறவு செயற்பாட்டை கூட்டு செயற்பாட்டிற்கு கொண்டு போக வேண்டும். இல்லையென்றால் இந்த ஆண்டும் தோல்வி ஆண்டாகவே முடிந்து விடும்.

---

(19ஆம் பக்க தொடர்ச்சி)

இனிமேலும் இவ்வாறான நிகழ்ச்சிநிரலுக்கு நாம் பலியாகாமல் இருக்க வேண்டுமென்றால் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்த வெகுசனங்களின் மீது அக்கறை உள்ளவர்கள் முன்வர வேண்டும். தென்னிந்தியாவில் இருக்கும் நடிகர்கள் மீதும் எனைய கலைஞர்கள் மீதும் எமது மக்களுக்கு ஓர் ஈர்ப்பு இருக்கிறது. இதுதான் யதார்த்தம். ஆகவே இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் பொழுது அவர்களை அழைத்து வருவது தவிர்க்கப்பட முடியாதது. ஆனால் அந்த ஒழுங்குபடுத்தலுக்கு பின்னால் சரியான நிகழ்ச்சிநிரல் இருக்குமாயின் அதனை இளையவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் வெற்றிகரமாகவும் இலாபகரமாகவும் நடத்த முடியும். இதனை சமூக ஆர்வலர்கள் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் இருப்போமாக இருந்தால் பெருவர்த்தக நிறுவனங்களின் இவ்வாறான கொள்ளையடிப்பையும் சீரழிப்பையும் தடுக்க முடியாது.

# தமிழ்மக்கள் ஒரு பலமான சமூகமாக இருக்கிறார்களா?



நிலாந்தன்

**த**மிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 31.12.2023 அன்று கோண்டாவிலில் இடம்பெற்ற சமகால அரசியல் உரையரங்கில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு,

நாங்கள் ஒரு சன சமூகமாக இருக்க வேண்டும். இருந்தால் தான் அடுத்த கட்டம் தேசமாக இருக்கலாம். நாங்கள் இப்போது சனசமூகமாகவே இல்லை. தமிழ் தேசியத்தின் இதயம் என்பது சனசமூக நிலையங்களுக்குள் இருந்து தான் கருக் கொண்டது. தமிழ் மக்களினுடைய போராட்டம் கருக் கொண்ட இடங்கள் யாவும் சனசமூக நிலையங்கள் பலமாக இருந்த இடங்கள். அங்கு தான் இரகசிய சந்திப்புக்கள் நடந்தன. பலமாக இருந்த இடத்தில் தான் போராட்டங்கள் தளைத்தோங்கின. அவை தான் போராட்டத்தை அடை காத்தன என்று கூட சொல்லலாம்.

இன்றைக்கும் சனசமூக நிலையங்கள் பலமாக இருக்கும் இடங்களில் வாழ்க்கை கொண்டாட்டமாக தான் இருக்கிறது. சரிகமப நிகழ்ச்சி தொடர்பில் விமர்சனங்களை தனியே வைத்து கொள்ளலாம். ஆனால் அதில் வென்று வந்த சிறுமியை கொண்டாடியவை சனசமூக நிலையங்கள் தான். சனசமூக நிலையங்கள் பலமாக இருக்கும் இடங்களில் தான் அப்படி வெற்றியை சமூகமாக கொண்டாட முடியும். படித்து நகரமயமாகி சிதறிப்போன மக்கள் கொண்டாட மாட்டார்கள்.

சனசமூக நிலையம் பலமாக இருக்கும் இடங்களுக்குள் கிரீஸ் மனிதன் வர முடியாது. நடுத்தர வர்க்கம் இருக்கும் இடங்களுக்குள் கிரீஸ் மனிதன் வந்தால் வெளி மின்விளக்கை அணைத்துவிட்டு கதவை மூடிவிட்டு பேசாமல் இருந்து விடுவர். ஆனால் நாவாந்துறைக்குள் சென்ற கிரீஸ் மனிதனை துரத்திக் கொண்டு போனார்கள். சனங்கள் இரவு இரவாக விழித்து இருந்து சனசமூகமாக

> இனப்பிரச்சனை என்பது சாராம்சத்தில் ஒரு பிராந்திய பிரச்சனை. அல்லது அனைத்துலக பிரச்சனை. இனப்பிரச்சனை உள்நாட்டு பிரச்சனையே அல்ல. அது உள்நாட்டு பிரச்சனையாக இருந்தால் அது இனப்பிரச்சனையும் அல்ல. இனப்பிரச்சனையின் மீது பிராந்திய சக்திகள், உலக சக்திகள் தலையிடும் பொழுது தான் அது ஒரு பிரச்சனையாகவே வெளியில் வருகின்றது.

இருக்கின்ற ஊர்களுக்குள் கிரீஸ் மனிதனால் போக முடியவில்லை. ஏன் வாளோடு கூட போக முடியவில்லை. அவ்வாறு கோண்டாவிலில் வாளோடு வந்த பொழுது சுற்றி பிடித்தார்கள். எனவே சனசமூக நிலையங்கள் எங்கள் அரசியலின் இதயம்.

நாங்கள் சனசமூக நிலையங்களை நோக்கி செல்ல வேண்டும். எங்களுடைய கட்சிகள் தேர்தல் காலங்களில் மட்டும் போகும். மற்றும்படி போவதில்லை. சனசமூக நிலையங்களுக்குள் சாதி இருக்கிறது. அதை கடந்து போக வேண்டும். ஆனாலும் அங்கே தான் வாழ்க்கை இருக்கிறது. வாழ்க்கை கொண்டாடப்படுகிறது. வேறு வகையில் தொலைக்காட்சி, தொலைபேசியில் நேரத்தை கழிக்காமல் மக்கள் சனசமூக நிலையங்களுக்குள் இருக்கின்றார்கள். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மூத்த பெரிய கட்சி தமிழரசு கட்சி. அதற்கு ஆங்கிலத்தில் சமஸ்டி கட்சி என்ற பெயர் உண்டு. அது சமஸ்டியை பெற தவறி 74 ஆண்டுகள் முடிகின்றன. எல்லாமே தோல்வி. அதன் பெயரிலே இருக்கின்ற சமஸ்டியை அது 74 ஆண்டுகளாகியும் பெறவில்லை. ஏறக்குறைய நூற்றாண்டுகளாக தோற்கிறோம்.

ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 2500 நாட்களையும் கடந்து சென்று கொண்டிருக்கும் போது மயிலத்தமடு பிரச்சனை வந்துவிட்டது. புதிது புதிதாக பிரச்சனைகள் வருகின்றன. ஒடுக்குமுறை குறையவில்லை. புதிது புதிதாக பிரச்சனை வருகிறது என்றால் எங்கேயோ பிழை இருக்கிறது. நாங்கள் தோற்றுக்கொண்டே இருக்கிறோம் ஏன்? வெற்றி பெற முடியவில்லை ஏன்? பெற்ற வெற்றிகளும் இறுதியில் தோல்விகளாக மாறியது ஏன்? தொகுத்து யோசித்திருக்கிறோமா? சாதாரணமாக ஒர் அலுவலகம் தனது ஆண்டு திட்டத்தை வகுக்கும். ஆனால் நீதிக்காக போராடும் மக்கள் என்று பார்க்கும் போது எங்களுக்கு ஆண்டு திட்டம் மட்டுமல்ல, எமது அரசியல் இலக்கை நோக்கிய ஒரு நீண்ட திட்டம் இருக்க வேண்டும். ஆண்டு திட்டத்தை வகுக்க முதல் தமிழ் மக்களுக்கான நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் ஏன் தோற்றோம்? இதனை கண்டுபிடிக்க வேண்டும். அப்படியென்றால் இனப்பிரச்சனை என்றால் என்ன என்று முதலில் யோசிக்க வேண்டும். அதனை அடிப்படை அர்த்தத்தில் விளங்கி கொள்ள வேண்டும்.

**மு.திருநாவுக்கரசு தொடர்ந்து சொல்வார், இனப்பிரச்சனை என்பது சாராம்சத்தில் ஒரு பிராந்திய பிரச்சனை. அல்லது அனைத்துலக பிரச்சனை. இனப்பிரச்சனை உள்நாட்டு பிரச்சனையே அல்ல. அது உள்நாட்டு பிரச்சனையாக இருந்தால் அது இனப்பிரச்சனையும் அல்ல. இனப்பிரச்சனையின் மீது பிராந்திய சக்திகள், உலக சக்திகள் தலையிடும் பொழுது தான் அது ஒரு பிரச்சனையாகவே வெளியில் வருகின்றது. எனவே இனப்பிரச்சனை என்பது ஒரு அனைத்துலக பிரச்சனை.**

எங்களுக்கு எட்டப்பட்ட தீர்வுகளில் இரண்டே இரண்டு தீர்வுகள் தான் அதிக காலம் நீடித்தன. ஒன்று இலங்கை-இந்திய உடன்படிக்கை, மற்றது ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை. இரண்டுமே சர்வதேச உடன்படிக்கைகள். இரண்டிலும் அனைத்துலக சமூகங்கள் பங்குபற்றின. இனப்பிரச்சனை ஒரு அனைத்துலக பிரச்சனை என்பதற்கு சிறந்த சான்று இது. ஆகவே இது எங்களுடைய பிரச்சனை மட்டுமல்ல, எங்களுக்கு வெளியில் இருக்கின்ற சக்திகள் சம்பந்தப்படுகின்ற பிரச்சனை. நாங்கள் சும்மா இருந்தாலும் அவர்கள் இருக்க விட மாட்டார்கள். நீங்கள் நித்திரை கொண்டாலும் சுடுநீர் ஊற்றி எழுப்புவார்கள். இதில் வேறு சக்திகள் தலையிடுகின்றன. அந்த

பிரச்சனையின் அடிப்படையை விளங்கி கொண்டால் தான் இந்த பிரச்சனைக்கான தீர்வையும் நாங்கள் தேடலாம்.

இனப்பிரச்சனை ஒரு அனைத்துலக பிரச்சனை, ஒரு பிராந்திய பிரச்சனை, ஒரு நாட்டிற்கு வெளியில் பரிணாமத்தை கொண்டிருக்கிற பிரச்சனை. இந்த அடிப்படையில் அதனை தீர்ப்பதாக இருந்தால் அதற்கு பொருத்தமான ஒரு அணுகுமுறை வேண்டும். பிராந்திய அளவிலும் அனைத்துலக அளவிலும் பொருத்தமான வெளியுறவு அணுகுமுறை வேண்டும். அந்த அணுகுமுறை ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான தலைவர்களிடம் இருந்ததா? ஆயுதப் போராட்டத்திலும் இருந்ததா? கடந்த 15 ஆண்டுகளாக இருக்கிறதா? இந்த வெளியுறவு அணுகுமுறை என்று வரும் போது வெளியுறவு செயற்பாடு என்பது என்ன? இனப்பிரச்சனை என்பது வெளிவிவகாரம் தான். அதேநேரம் அதற்கு ஓர் உள்விவகார பரிமாணம் இருக்கிறது. அதனை அடுத்த கட்டமாக பார்ப்போம்.

வெளிச்சக்திகளோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனை என்று வரும் போது அதற்கு எங்களிடம் இருக்க வேண்டியது சரியான ஒரு வெளியுறவு தரிசனம். வெளியுறவு என்பது என்ன? ஒரு அதிகார மையமும் இன்னொரு அதிகார மையமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்வது, இடையூடாடுவது. ஆகவே என்ன செய்ய வேண்டும்? வெளியில் இருக்கின்ற பல-மையங்களோடு தொடர்பு கொள்வதாக இருந்தால் நாங்கள் ஒரு வலுவான பல-மையமாக வர வேண்டும். தமிழ் மக்கள் ஒரு பலமான மையமாக இருக்கிறார்களா? இல்லை. தமிழ் மக்கள் பல மையங்களாக இருக்கின்றார்கள். பிரச்சனையே அதுதான்.

ஒரு கட்சி இந்தியாவிற்கு போகும். அது நான்கு, ஐந்து பேரோடு போகும். இன்னொரு கட்சியை சேர்ந்த ஒருவர் அமெரிக்காவிற்கு போவார். ஐ.நாவில் ஒரு அமைப்பு தான் தமிழ் மக்களின் பிரதிநிதி என்று முத்திரை குத்திக் கொண்டு வந்து நிற்கும். இப்படியே ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு ஓட்டம். ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு தூதரகம். அப்படியென்றால் இதற்கு பெயர் வெளியுறவு செயற்பாடா? இல்லை. இது வெளி சக்திகளுக்கு எங்களை பிரித்து கையாளலாம் என்கிற துணிச்சலை கொடுக்கும். அதுதான் நடக்கிறது. வெளியுறவு செயற்பாடுகள் ஒரு பல-மையத்தால் திட்டமிடப்பட்டு அந்த மையம் வெளியில் உள்ள பல வலுவான மையங்களோடு தொடர்பு கொள்வது தான். அதுதான் நடக்க வேண்டியது.

வெளியுறவு என்ற அடிப்படையில் நாங்கள் முதலில் பலமான மையமாக வளர வேண்டும். இன்றைக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் கிழிசு கெட்ட சொல் ஐக்கியம். ஐக்கியம் ஒரு பகிடியாக போய்விட்டது. ஐக்கியம் என்ற வார்த்தையே சிலருக்கு வெறுப்பாக இருக்கிறது. நாங்கள் ஐக்கியத்தை பற்றி கதைக்காமல் வேறு எதனையும் பற்றி கதைப்போம் என்று சொல்கின்ற நிலைமை வந்துவிட்டது. நீங்கள் ஒரு சிறிய மக்கள். வேறு எப்படி வலு மையமாக வருவீர்கள்? உங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் புலம்பெயர்ந்து போய்விட்டார்கள். இன்றைக்கும் போய் கொண்டிருக்கிறார்கள். சனத்தொகை பெருக்கம் குறைவு, காணாமல் ஆக்கப்பட்டார்கள், புலப்பெயர்ச்சி, மூன்று இலட்சத்திற்கும் குறையாமல் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு எண்ணிக்கையில் குறைந்த நாங்கள் எத்தனை கட்சியாக பிரிந்து போயிருக்கிறோம். வடக்கு கிழக்காக, சாதியாய் சமயமாய் பிரிந்து போய்விட்டோம். அதுதான் சொன்னேனே, சன சமூகமாக இல்லை.

ஐக்கியம் என்றால் எல்லோரையும் சமப்படுத்துவது என்பது இல்லை, பதிலாக ஒரு தரப்பு பலமாக மேலெழும் பொழுது அதனோடு ஏனைய தரப்புக்கள் இணைவது. ஆயுதப் போராட்டத்தில் அதுதான் நடந்தது. முதலில் பல இயக்கங்கள் இருந்தன. பிறகு ஒரு இயக்கம் படிப்படியாக ஏனைய இயக்கங்களை தோற்கடிக்க தொடங்கியது. அரங்கில் இருந்து அகற்ற தொடங்கியது. ஒரு கட்டத்தில் அந்த இயக்கம் தலை எடுத்த பொழுது அந்த இயக்கம் தான் தோற்கடித்த இயக்கங்களை திருப்பி ஏற்கிறது. எல்லா கட்சிகளையும் இணைத்தது. எல்லோரையும் சேர்த்து அது கூட்டமைப்பை உருவாக்குகிறது. எனவே ஐக்கியம் என்பது ஒன்று பலமாக வரும் பொழுது அல்லது பல

மான தலைமை மேலெழும் பொழுது ஏனைய வர்கள் அதன் பின் வருவார்கள். பிரச்சனை என்னவென்றால் எங்களிடம் அப்படிப்பட்ட தலைமைகள் வரவில்லை.

தமிழ் மக்கள் பேரவை இருந்த பொழுது விக்னேஸ்வரனுக்கு அப்படி ஒரு முகம் இரு ந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, நிச்சய மாக நிரந்தரமாக இல்லை, அவரை வைத்துக் கொண்டு அப்படி ஒரு முகத்தை கட்டியெழுப்ப லாமா என்று சிந்திக்கப்பட்டது. அதற்கு பல மான காரணம் இருந்தது. ஏனென்றால் ஆயுதப் போராட்டம் தற்பொழுதும் அனைத்துலக அள வில் குற்றமயப்படுத்தப்பட்டு இருக்கின்றது. 25 க்கு மேற்பட்ட நாடுகளில் இப்பொழுதும் தடை. அது இப்போதும் பயங்கரவாதமாக தான் இரு க்கிறது. சட்ட பின்புலத்தில் இருந்து வந்த முன் னாள் நீதிபதியை முன்னுக்கு கொண்டு வந்து நிறுத்தினால் குற்றமயப்பட்ட போராட்டத்தை குற்றமய நீக்கம் செய்வதற்கு அவர் உதவலாம் என்ற ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. அது முழு வெற்றி பெறவில்லை என்பது வேற விடயம். ஆனால் விக்னேஸ்வரனை தமிழ் மக்கள் பேரவைக்குள் மேலுயர்த்த அது ஒரு முக்கிய காரணம். ஆனால் அவரை ஒரு ஜனவசிய தலைவராக வைத்துக் கொண்டு ஒரு தலை மையை கட்டியெழுப்ப முடியவில்லை. அவர் தலைமைத்துவத்திற்கு தகுதி குறைந்தவர் என் பதை தற்போது நிரூபித்துக் கொண்டு இருக் கிறார். அதற்கு பிறகு எங்களிடம் அப்படியொரு பலமான தலைமைத்துவம் வரவில்லை.

ஒரு மனிதன் பூரணமாக எல்லா தகுதிக ளோடும் இருப்பதில்லை. எல்லா பிரமாண்ட மான தலைவருக்கு பின்னரும் வெளியில் தெரிய வராத தத்துவ ஞானிகளும் தளபதிகளும் இருந்திருக்கிறார்கள். எனவே இதில் ஏனையவர் களின் தலைமைத்துவத்தையும் அங்கீகரிக் கும் பொழுது ஒரு பலமான இணைத்தலைமை வரும். நாங்கள் இதை அரசியலில் வைத்து கதைக்கிறோம். ஆனால் இது போருக்கும் பொரு ந்தும், இராஜதந்திரத்திற்கும் பொருந்தும்.

சிறிலங்கா அரச படைகளின் கிழக்கு படை கட்டளையகத்தின் தலைவராக இருந் தவர், ஜெனரல் பொனிபஸ் பெரேரா. இவர் ஒரு சிங்கள ஊடகத்திற்கு வழங்கிய பேட்டி ஒன்றில், போர் என்பது ஓர் கூட்டு முயற்சி ஆகும். போரை ஜெனரல் ஒருவரால் செய்ய முடியாது. இராணுவத்தால் மட்டும் போர் செய்ய முடியாது. கடற்படை வேண்டும், வான்படை வேண்டும், சிவில் பாதுகாப்பு படை, பொலி சாரின் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும். சிற ந்த அரசியல் தலைமைத்துவம் இருக்க வேண் டும். பிக்குகள் எங்களை தைரியப்படுத்தினார் கள். வைத்தியர்கள், தாதிமார் சிகிச்சை அளித் தார்கள். மக்கள் வரி செலுத்தினார்கள். தமது பிள்ளைகளை நாட்டுக்காக வழங்கினார்கள். அமெரிக்கா எங்களுக்கு தொழில்நுட்ப உதவி களை வழங்கியது. சீனா மற்றும் பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கின. இந்தியா புலனாய்வு உட்பட சிற்சில உதவிகளை வழங்கியது. அதே போல தற்போது இருக்கின்ற ஜனாதிபதி புலி கள் அமைப்பில் இருந்து கருணாவை பிரித்து எடுத்து அந்த அமைப்பை பலவீனப்படுத்தினார். இதுதான் கூட்டு முயற்சி. ஒசாமா பின்லேடன் கூட எங்களுக்கு உதவினார் என்றே சொல்ல வேண்டும். அவர் அமெரிக்காவின் மீது தாக் குதல் நடத்தியதால் பயங்கரவாதம் குறித்த அமெரிக்காவின் நிலைப்பாடு மாறியது. நிதி முடக்கம் உட்பட பயங்கரவாதத்திற்கு எதிரான நடடிக்கைகள் கடுமையாக்கப்பட்டன. போர் வெற்றி எனப்படுவது தனி நபருக்கு உரியது அல்ல அது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. போருக்கு மட்டுமல்ல அரசியலுக்கு, வெளியுறவு செயற்பாட்டுக்கு எல்லாவற்றுக்கும் இது பொருந்தும்.

ஐக்கியம் என்ற வசனம் ஒவ்வாமை என் றால் விட்டுவிடுவோம். கூட்டு முயற்சி வேண் டும். ஒரு தனிக் கட்சி ஒரு தனி ஓட்டம் ஓடி விகாரைகள் கட்டுவதை நிறுத்த முடியாது. ஒரு தனிக் கட்சியின் ஒருவர் அமெரிக்காவிற்கு பறந்து வெளியுறவு செயற்பாடுகளை செய்ய முடியாது. ஒரு கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும், சுவாமிமார்களும் இணைந்து இந்தியாவிற்கு சென்று இந்தியாவை கையாண்டு விட முடியாது. திறமைசாலிகள், சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்கள் எல்லோரும் இணைந்து அந்த கூட்டு முயற்சிக்கு போக வேண்டும். அப்போது தான் தமிழ் மக்கள் வெளியுறவு செயற்பாடுகளில் வெற்றி பெறலாம். வெளியுறவு செயற்பாடுகளில் வெற்றி பெறவில்லை என்றால் இந்த ஆண்டும் தோல்வி ஆண்டாகவே முடியக் கூடும்.

**2010 இல் சரத் பொன்சேகா தமிழ் மக்களுடன் ஒரு உடன்படிக்கைக்கு வர முற்பட்டு தோற்றார். எனவே யாருமே பகிரங்கமாக தமிழ் வேட்பாளர்களோடு உடன் படிக்கைக்கு வர மாட்டார்கள். வராத போது ஒரு பகிரங்கமான உடன்படிக்கை எழுத மாட்டார்கள். எனவே இவர்கள் பகிரங்கமாக இனப்பிரச்சனையை தீர்ப்ப தாக உறுதியளிப்பதற்கு தயாரில்லை என்பதை பகிரங்கமாக சொல்வோம்**

ஜனாதிபதி தேர்தல் வந்தால் அதில் தமிழ் மக்கள் என்ன நிலைப்பாட்டை எடுப்பது? அண்மையில் இதேபோல தான் கரவெட்டியில் கட்டைவேலி கிராமத்தில் ஒரு திருச்சபை ஒழு ங்குபடுத்திய ஒரு கூட்டத்தில் நான் பேசி னேன். மொத்தம் 39 பெண்கள், 01 ஆண். ஒரு கட்டத்தில் இந்த கேள்வியை கேட்டேன். ஒரு பொது வேட்பாளரை நிறுத்தினால் என்ன செய் வீர்கள் என்று. “அவருக்கு தான் வாக்களிப் போம்” என்று பெரும்பாலான பெண்கள் கையை தூக்கினார்கள். ஒரு பெண் இரகசியமாக சொல் கிறார், எனக்கு கேட்கிறது, “தமிழீழம் என்றால் கட்டாயம் எல்லோரும் வாக்களிப்போம்” என்று.

ஆகவே பொது வேட்பாளர் ஏன் வேண் டும்? ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் வெல்ல மாட்டார். ஆனால் அவர் சிங்கள வேட்பாளர்களின் வெற்றியை கேள்வி க்கு உள்ளாக்குவார். சவால்களுக்கு உள்ளாக் குவார். எப்படி என்றால் 50% க்கு மேல் வாக்கு கிடைப்பவர் தான் வெற்றி பெறலாம். தமிழ் வாக்குகள் 5-6 இலட்சம் என்று வைத்துக் கொள் வோமே. அதை இந்த தமிழ் வேட்பாளர் எடுத்து விட்டார் என்றால் அவர் தனியே சிங்கள வாக்கு களில் தங்கியிருந்தால் சிலவேளை 50%க்கு மேலான வாக்குகள் கிடைக்காமல் போகும். அப்படியாகும் போது முதலாவது சுற்று வாக் கெடுப்பு கணக்கெடுப்பில் அவர் வெல்ல மாட் டார். ஒருவரும் வெல்ல மாட்டார்கள். இரண்டா வது சுற்று வாக்கு கணக்கெடுப்பிற்கு போகும் போது அவர் இந்த தமிழ் வேட்பாளருடன் கதைக்க வேண்டி வரும். ஏன் தெரியுமா, தமிழ் மக்கள் யாருக்கு இரண்டாவது விருப்ப தெரிவை கொடுக்கிறார்களோ அவர் வெற்றி பெறக் கூடிய வாய்ப்பு அதிகமாகும். இதனை 2010 ஆம் ஆண்டு மு.திருநாவுக்கரசு எழுதினார். பின்பு 2015 ஆம் ஆண்டு வந்த அடுத்த தேர் தலிலும் எழுதினார். 2019 ஆம் ஆண்டும் ஒரு காணொளியில் சொன்னார். தமிழ் அரசியலில் சரியான அரசியல் வழிகாட்டல்கள் சரியான காலகட்டத்தில் வந்திருக்கின்றன. ஆனால் அவை அரசியல் தீர்மானங்களாக மாற்றப்பட வில்லை. அதன் தோல்வி தான் தமிழ் அரசிய லில் தோல்வி.

இந்த வழிகாட்டலின் அடிப்படையில் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று சொன்னால், தமிழ் தேசிய மக்கள் முன் னணி ஒரு வாதத்தை முன்வைக்கிறது. அதா வது, இரண்டு சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசி யார் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வாரோ அவரை ஆதிரிப்பது என்ற ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டி வரும். நாங்கள் யாரையுமே ஆதரிக்க முடியாது ஆகவே நாங்கள் பகிஸ்கரிக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

பிரச்சனை என்னவென்றால் இரண்டு சிங்கள வேட்பாளர்களுமே இப்போது இருக் கின்ற நிலைமையில் குறிப்பாக 2010 இல் சரத் பொன்சேகா தமிழ் மக்களுடன் ஒரு உடன் படிக்கைக்கு வர முற்பட்டு தோற்றார். எனவே யாருமே பகிரங்கமாக தமிழ் வேட்பாளர்களோடு உடன்படிக்கைக்கு வர மாட்டார்கள். வராத போது ஒரு பகிரங்கமான உடன்படிக்கை எழுத மாட்டார்கள். எனவே இவர்கள் பகிரங்கமாக இனப்பிரச்சனையை தீர்ப்பதாக உறுதியளிப்பத ற்கு தயாரில்லை என்பதை பகிரங்கமாக சொல் வோம்.

அதைவிட முக்கியமாக பொது வேட் பாளர் தமிழ் மக்களுக்கு என்ன தேவையோ அதை உலக அரங்கிற்கு எடுத்துரைத்து முன் வைக்கலாம். தமிழீழம் வேண்டுமென்றால் அதை யும் முன்வைக்கலாம். பொது வாக்கெடுப்பு என்

(10ஆம் பக்கம் பார்க்கவும்)

(03ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அனும திக்க மாட்டா. கிராம அபிவிருத்திச் சங்க த்தின் அனுமதியின்றி கிராமத்திற்குள் கடன் வழங்கும் நிறுவனங்கள் உட்சென்று கடன் களை கொடுத்து மக்களை ஏமாற்றுவதை அனுமதிக்க கூடாது.

உதாரணத்திற்கு, சில இடங்களில் எங்க ளுடைய கனிம வள திணைக்களம் என்ன செய்கிறது, மண் மற்றும் சரளை என்பவற்றை அள்ளுவதற்கு அனுமதி கொடுக்கிறது. யாரோ ஒருவருக்கு எங்கோ ஓர் இடத்திற்கு சென்று மண் அள்ளுவதற்கு அனுமதி கொடுப்பார்கள். அதற்குரிய கட்டணத்தை அறவிடுவார்கள். இத் தோடு அவர்களின் வேலை முடிந்து விடும். இந்த அனுமதியை பெற்றவர் என்ன செய்கின்றார், அந்த அனுமதியை சரியான முறையில் பயன் படுத்துகின்றாரா, சரியான முறையில் அனும திக்கப்பட்ட அளவை செய்கிறாரா, அனும திக்கப்பட்ட முறைகள் ஊடாக அந்த மண்ணை அகழ்கின்றாரா, அந்த மண்ணை அகழ்ந்த பின் அந்த இடத்தில் ஏற்படுகின்ற பள்ளங் களை எப்படி சமன் செய்கின்றார், போன்ற விடயங்களை யார் கண்காணிப்பது? கனிம வள திணைக்களம் கண்காணிக்கின்றதா, இல் லையே. எனவே அந்த திணைக்களத்தால் மண் அள்ளுவதற்கு அனுமதி பெற்றவர்களில் பலர் பேராசை கொண்டு தங்களுக்கு அனும திக்கப்பட்ட அளவை விட அள்ளி கொள்கி றார்கள். அதனால் பாரிய பள்ளங்கள் வருகி ன்றன. மழை காலங்களில் வெள்ளம் நிற்கி றது. மனிதர்களும், மிருகங்களும் அதற்குள் சிக்குப்பட வேண்டி வருகிறது.

அதேவேளை இன்னொரு பக்கம் இவர் கள் மண் அகழ்வதற்காக ஆற்றுப்படுக்கைகளை யும், நீரோடும் பகுதிகளையும் கூட கைப்பற்று கின்றனர். இதுவும் ஒருவிதமான வன்முறை தான். இந்த அடாவடித்தனம் ஊடாக கைப்பற்றி மண்ணை அகழும் போது அந்த நீரோட்ட பகுதியினுடைய சாய்வு பாதிக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணங்களில் நிலம் சமதரையானது. சாய்வு மிக சிறியது. எனவே நீர் மெதுவாக தான் இங்கே பிரயாணம் செய்யும். நீர் மெதுவாக சென்று தான் குளங்க ளையும், வாய்க்கால்களையும் கடந்து சென் றடையும். ஏற்கனவே யுத்த காலத்தில் நாங் கள் போட்டிருந்த காவல் அரண்களுக்காக கிண்டிய குழிகளினால் எங்களுடைய இய ற்கை நீரோட்டத்தினுடைய பாதை மாற்றப் பட்டிருக்கிறது. முன்னைய காலத்தில் இருந்த சீரான நீரோட்டம் இப்பொழுது இல்லை. அதற்கும் மேலாக இப்போது என்ன நடக்கிறது என்றால், அளவுக்கு மீறி மண் அகழ்வதால் குழிகள் தோன்றி நிலத்தினுடைய சமநிலை பாதிக்கப்படுகிறது. இவ்வாறு பாதிக்கப்படுவ தால் மழை பெய்யும் போது வெள்ளம் தேங்கி நிற்கிறது. அல்லது தனது இயல்பான பாதைக்குள் பிரவேசிக்க முடியாது நிற்கிறது. இதனால் ஒர் இடத்தில் வெள்ளம் வருகின்றது. இன்னுமோர் இடத்தில் நீர் நிலத்திற்கு கீழ் செல்லாதபடியால் அங்கு வரட்சி வருகிறது. ஆகவே கனிம வள திணைக்களம் அனுமதி கொடுக்கும் போது இவற்றை பார்க்கின்றதா? இவை எல்லாவற்றையும் சிந்தித்தா செய்கின்றது என்ற ஒரு கேள்வி இருக்கிறது.

சாதாரணமாக எந்த திட்டத்தை அனும திப்பதாக இருந்தாலும் கூட அந்த திட்டத்தை செய்ய முதல் சூழல் தாக்க மதிப்பீடு என்ற ஒரு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஒரு இடத்தில் மண் அகழ்வதாக இருந்தாலும் அந்த இடத்தில் சூழல் தாக்க நிலை பற்றி அறிக்கை பெறப்பட்டு தான் அனுமதிக்கப்பட வேண்டும். காடு அழிப்பதாக இருந்தாலும் வீதி ஒன்றினை அமைப்பதாக இருந்தாலும் சரி அங்கு சூழல் தாக்க மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வீதிகளை அமைக்கும் போது படை படையாக மேலே மேலே போட்டு வீதிகளின் உயரம் கூடிக்கொண்டே போகிறது. நீரோட்ட பாதைகள் தடைப்படுகின்றன. வீதிகளை அமை க்கும் போது இந்த சூழல் தாக்க மதிப்பீட்டை செய்தோமா? அவ்வாறு பார்க்காதபடியால் தானே கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டா வளை பிரதேச செயலகத்தில் ஒரு வீதியில் பாலத்தை கட்டிய பின்னர் அங்கு வெள்ளம் வந்து மிகப்பெரிய பாதிப்பு வந்தது. பிறகு அந்த பாலத்தை உடைத்து கட்ட வேண்டி உள்ளது. எனவே இப்படியான விடயங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முதன்மை பெற வேண்டும்.

ஒரு பிரதேச செயலகத்திற்குள் உள்ள பகுதியில் யாராவது மண் அகழ்வதற்கு அனு

> **கிராம அபிவிருத்திச் சங்கம் தனது மக்களுக்கும் தனது கிராமத்திற்கும் விசுவாசமாக இருக்க வேண்டும். பல இடங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் விலைக்கு வாங்கப்படுகின்றன. அவ்வாறு விலைக்கு வாங்கப்பட்டு தவறான பணிகளுக்கு உடந்தையாகின்றன**

மதி கொடுப்பதாக இருந்தால் அந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தினரோடு சேர்ந்து இந்த விடயத்தை பார்க்க வேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கம் தனது மக்களுக்கும் தனது கிராமத்திற்கும் விசுவாசமாக இருக்க வேண்டும். பல இடங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் விலைக்கு வாங்கப்படுகின்றன. அவ்வாறு விலைக்கு வாங்கப்பட்டு தவறான பணிகளுக்கு உடந்தையாகின்றன. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

சமூகத்தில் நடக்கின்ற விடயங்கள் எல்லாம் பகிரங்கமாக பகிரப்பட வேண்டும். காட்சிப் பலகையில் போடப்பட வேண்டும். முன்பு ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் செய்கின்ற எல்லா அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாகவும் அந்தந்த அபிவிருத்தி மையங்களில் விளம்பரப் பலகை போடப்பட்டது. அது கட்டாயமாக்கப்பட்டது. அந்த விளம்பரப்பலகையில் எந்த நிதியிலிருந்து பணம் வருகிறது, எப்பொழுது செய்யப்படுகிறது, எப்படி செய்யப்படுகிறது, யார் அந்த ஒப்பந்தக்காரர், அவருடைய விபரம், அந்த வேலையை கண்காணிக்கின்ற பொறுப்பாளரின் விபரங்கள் என்பவை எல்லாம் போடப்பட்டன. ஆனால் இப்பொழுது காணாமல் போய்விட்டது. இருந்த நல்ல முறைமைகள் எல்லாம் நாசமாக்கப்பட்டு கைவிடப்பட்டன.

சோம்பேறித்தனம், இயலாமை என்பவற்றால் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இது வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கைக்குமே பொருந்தும். மக்களுக்கு தகவல்களை தெரிவிக்க வேண்டும். தங்களை சுற்றி என்ன நடக்கிறது, தங்களுடைய கிராமத்தில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் தெளிவாக இருப்பார்கள்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தங்கள் கிராமங்கள் பற்றிய சகல விபரங்களையும் கொண்ட மையங்களாக மாற வேண்டும். அந்த தகவல்களின் அடிப்படையில் தான் கிராம சேவகர் கூட பணியாற்ற வேண்டும். அந்த கிராமத்துக்குள் ஒரு பங்கீட்டு முறை வருகின்ற பொழுது கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் மக்களுக்கும் தெரிய வேண்டும். எந்த அடிப்படையில் இந்த பங்கீட்டு முறை நடக்கிறது என்று தெரிய வேண்டும். அந்த பங்கீட்டுப் பட்டியல் சமூகத்திற்கு முன் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு அந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களை எல்லா இடங்களிலும் நாங்கள் வலுவூட்டுவோமாக இருந்தால் அவற்றுக்கு கடப்பாடு தானாகவே வரும்.

தங்களுடைய இளைஞர்களை தாங்கள் பாதுகாப்பதற்கும், தங்களுடைய கிராமத்தின் முதியவர்களை பாதுகாப்பதற்கும், குழந்தைகளையும், பெண்களையும் பாதுகாப்பதற்குமான கடப்பாட்டை கூட அவர்கள் தானாக பொறுப்பெடுப்பார்கள். ஒட்டுமொத்த சமூகமும் சேர்ந்து தன்னுடைய கிராமத்தை பாதுகாக்கும். கிராமத்தின் உணவு பாதுகாக்கப்படும். கிராமத்தின் பொருண்மியம், வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும். அதனை கிராம அபிவிருத்திச் சங்கமே பார்த்துக் கொள்ளும். அந்த ஊரில் பாடசாலை இடைவிலகல் இருக்க கூடாது என்பதை கூட அந்த கிராம அபிவிருத்திச் சங்கம் பார்த்து கொள்ளும். 7000 மாணவர்கள் தங்களுடைய உயர்கல்வியை விட்டு விலகி இருக்கிறார்கள் என்று வட மாகாணத்தினுடைய முதன்மைச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார். மிகப்பெரிய கடுமையான விடயம். ஆகவே இந்த விடயங்களை எல்லாம் யார் ஊரிலே கண்காணிப்பது? தங்கள் ஊரிலிருந்து பாடசாலைக்கோ, பல்கலைக்கழகத்திற்கோ, தொழில்நுட்ப கல்லூரிக்கோ சென்ற ஒரு பிள்ளை போகாமல் விட்டு விட்டால் யார் கேள்வி கேட்பது? சமூகம் கேள்வி கேட்க வேண்டும். குடும்பம் கேள்வி

கேட்க வேண்டும். அங்குள்ள கற்றோர் கேள்வி கேட்க வேண்டும். வழிகாட்ட வேண்டும். அவர் களுக்கு உள வள ஆலோசனை கொடுக்க வேண்டும். அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச் சனைகளுக்கு தீர்வு கொடுத்தால் அவர்கள் தொடர்வார்கள். அப்படி எதுவுமே இல்லாமல் அல்லவா இருக்கிறோம்?

கிராம அபிவிருத்திச் சங்கங்களினூடாக கிராமங்களை வலுவூட்டி, கிராமங்களின் பொது மையங்களை வளப்படுத்தி எங்களுடைய இளை ஞர்களை கிராமத்திற்குள்ளே மகிழ்ந்திருக்க கூடியதாகவும் தங்கள் ஆற்றல்களை கூர்மை யாக்கி கொள்ள கூடியதாகவும் பொது மையங் களை நாங்கள் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு பெரிய கட்டிடங்களோ காசோ தேவையி ல்லை. கிராமங்களில் தேவையானளவு கட்டிட ங்கள் இருக்கின்றன. கோயில்கள், சன சமூக நிலையங்கள் இருக்கின்றன. அவற்றை பயன்படுத்துவது தானே. ஏன் நாங்கள் சிந்திக்க முடியாமல் இருக்கிறோம்? எங்க ளுக்கு சம்பந்தம் இல்லை என்று நாங்கள் ஒவ்வொருவரும் அந்நியப்பட்டு இருக்கிறோம். தப்பித்து கொள்ள பார்க்கின்றோம். இந்த நிலைமையை நாங்கள் மாற்ற வேண்டும்.

எங்களுடைய இளைஞர்களுக்கு சரியான வழியையும் வாய்ப்புகளையும் உருவாக்கி கொடுத்தால் இளைஞர்கள் விட்டில் பூச்சிகள் போல் தவறானவர்களின் கரங்களில் போய் விழ மாட்டார்கள். நாங்கள் அதற்கான வழி களை கண்டுபிடிக்க வேண்டும். மாற்று வழி களை கண்டுபிடித்து அவர்களை வழிப்படுத் தாமல் விட்டுவிட்டு தவறானவர்கள் அல் லது இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்பவர்களை வெறும் கண்டனங்களை மட் டும் செய்துக் கொண்டு அல்லது எங்களுடைய இளைஞர்களை மிக தவறாக பார்த்துக் கொண்டு இருப்பது ஆபத்தானது. இளைஞர்கள் ஓடி வரும் வெள்ளம் போன்றவர்கள். அந்த வெள்ளத்தை நாங்கள் தடுத்து நிறுத்தினால் அணை உடைக்கும். எனவே எங்களுக்கு பொருத்தமில்லாத வழியில் வெள்ளம் போகுமாக இருந்தால் அதனை மறிப்பது மட்டுமல்ல அதற்கு மாற்று வழியையும் நாங்கள் தான் கொடுக்க வேண்டும். நாங்கள் வாய்க்கால் வெட்டிவிட்டால் தான் நீர் வயலுக்கு போகும். அல்லது நாங்கள் நினைக்கின்ற குளத்திற்கு போகும்.

நாங்கள் வெறுமனே இப்போது இருக் கின்ற பரீட்சையை மட்டும் மையப்படுத்திய கல் விக்குள் எங்களுடைய பிள்ளைகளின் ஆற்றல் களை ஒட்டுமொத்தமாக சீரழித்து இருக்கி றோம். பிள்ளைகளின் பிறப்பாற்றல்களை கண் டறிந்து அவர்களை மேம்படுத்துகின்ற பணியை நாங்கள் இன்னும் செய்யவே இல்லை. எங் களுடைய கல்வி முறைமையும், கல்வித் திணைக்களங்களும், பாடசாலைகளும் இந்த முறைசார் கல்வி என்கின்ற வறட்டு கல்வித் திட்டத்திற்கு ஊடாக தாங்கள் யாருக்கோ தயாரித்த சப்பாத்துக்களை எங்களுடைய பிள் ளைகளை அணிய செய்கிறார்கள். பொரு த்தமில்லை என்றால் காலை வெட்டும் படி சொல்கின்றார்கள். சப்பாத்தை மாற்றுவது பற்றி சிந்திக்க முடியாமல் இருக்கிறார்கள்.

பாடசாலை சமூகமும் கூட தங்களுக்கு அது பொறுப்பில்லை என்பது போல இருக் கின்ற நிலைமை தான் காணப்படுகிறது. பாட சாலையில் உயர்தர பரீட்சையின் பின்பு அதிப ரும் ஆசிரியர்களும் தங்களின் பாடசாலையில் இருந்து எத்தனை பேருக்கு மருத்துவ பீடம் கிடைத்துள்ளது, எத்தனை பேருக்கு பொறி யியல் பீடம், எத்தனை பேருக்கு கலைப் பீடம் என்று பரீட்சை எழுதிய மாணவர்களில் 10 வீதமான மாணவர்களை பற்றி பேசி அவர் களுடைய படங்களை போடுகின்றார்கள். அதேவேளையில் 90 வீதமான மாணவர்கள் வீதியில் போய் தங்களுடைய எதிர்காலம் என்னவென்று தெரியாமல் இருப்பார்கள். அவர் களை இந்த பாடசாலை கல்வி சமூகம் மற ந்து போகும். அதுதான் மிக அபத்தமானது. அவர்களை கையேற்பதற்கு இந்த பாடசாலை சமூகமும், பெற்றோரும், ஊரும் விரைந்து முன் வர வேண்டும். இது மிக அவசரமானதும் அவசியமானதும் ஆகும். இந்த விடயத்தை பொறுப்பேற்க வேண்டியது கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலையாய கடமையாகும்.

டெய்லர் சுவிவ்ற் (Taylor Swift) என்ற அமெரிக்காவின் உலகப் பிரபலம் பெற்ற பாடகி பங்குனி 7 ஆம் திகதியிலிருந்து 4 நாட்களாக இசைநிகழ்ச்சிகளை சிங்கப்பூரில் நடத்தினார். அந்த நிகழ்ச்சிகளுக்கான செலவு 18 மில்லியன் அமெரிக்க டொலர் என்று மதிப்பிடப்படுகிறது. அந்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக சிங்கப்பூர் அரசாங்கம் சலுகைகளை வழங்கியுள்ளது. அந்த சலுகைகளுக்கு பின்னால் சிங்கப்பூரின் பொருளாதார நலன்கள் இருப்பது கண்கூடானது. அதே வேளை பாடகி பொருளாதார ரீதியாக பல மில்லியன் டொலர்களை இலாபமாக பெற்றுக் கொள்வார் என்பதுவும் வெளிப்படையானது.

இந்த நிகழ்ச்சி சிங்கப்பூரை சுற்றியுள்ள நாடுகளின் விசனத்துக்கு உள்ளாகியுள்ளது. தமது குடிமக்கள் தான் இந்த நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அவர்கள் கோபப்படுகிறார்கள். சிங்கப்பூரின் நாணயம் தென் கிழக்கு ஆசியாவின் பலமான நாணயமாக உள்ளது. அதனைச் சுற்றியுள்ள நாடுகள் ஒப்பீட்டு ரீதியில் வறிய நாடுகளாக இருக்கிறார்கள். அதனால் அந்த நாடுகளிலிருந்து சிங்கப்பூருக்கு வருபவர்கள் குறைவு. ஆனால் அங்குள்ள இளையவர்களின் மத்தியில் டெய்லர் சுவிவ்ற் ஒரு கடவுளாக பார்க்கப்படும் பாடகியாக இருக்கிறார். அந்த விம்பத்தின் காரணமாக தன்னுடைய பொருளாதார நலன்களுக்காக சிங்கப்பூர் நடத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு தமது மக்கள் பலியாகப் போகிறார்கள் என்று அந்த நாடுகளின் தலைவர்கள் கவலைப்படுகிறார்கள்.

சிங்கப்பூரின் அயல் நாடுகளில் குடிசைகளிலும், அன்றாடங்காய்ச்சிகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தமது அபிமான பாடகியைப் பார்ப்பதற்காக தமது வாழ்நாள் சேமிப்புகளை எல்லாம் செலவழிக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். சீனாவின் சென்ஜென் நகரத்தில் இருந்து வந்த பெண் ஒருவர் தனது பயணச்சீட்டுக்கு மட்டும் ஏறத்தாழ 900 அமெரிக்க டொலர்களை செலவழித்திருக்கிறார். பிலிப்பைன்ஸை சேர்ந்த 22 வயதான ஓர் இளைஞர் 1500 அமெரிக்க டொலர்களை செலவழித்து தனது தாயாருடன் அங்கு சென்றார். பிலிப்பைன்ஸில் ஒரு சராசரி குடும்பத்தின் மாதாந்த வருமானம் இது.

அண்மையில் யாழ்ப்பாணத்தின் முற்றவெளியில் தென்னிந்திய நடிகைகள் பங்குபற்றிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. பெருமளவு பணத்தை செலவழித்து நடந்த இந்த நிகழ்ச்சி வடக்கு பல்கலைக் கழகம் (Northern Uni) எனும் ஒரு நிறுவனத்தின் அனுசரணையில் நடத்தப்பட்டது. அந்த பல்கலைக் கழகத்தின் விளம்பரத்துக்காக அந்த நிகழ்ச்சி இலவசமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக சொல்லப் பட்டது. பின்னர் ஒரு பகுதியினரிடம் கட்டணம் அறவிடப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது இளையவரை குதூகலப்படுத்தும் தன்னலமற்ற தியாக நோக்கத்துடன் தான் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படுவதாக பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னால் ஒரு பெரும் நிகழ்ச்சி நிரல் இருந்திருக்கிறது. அந்த நிகழ்ச்சியை ஒளிப் பதிவு செய்வதற்கும் மற்றும் அதனை ஒளிபரப்புவதற்குமான உரிமை தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒரு நிறுவனத்துக்கு பெருந்தொகை பணத்திற்கு விற்கப்பட்டுள்ளது. இவை எதுவுமே வெளியில் சொல்லப்படவில்லை. அதனை அறியாமல் அங்கு சென்று காணொளிகளை பதிவு செய்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த யூடியுப் படப்பிடிப்பாளர்கள் யூடியுப் நிறுவனத்தினால் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். அந்த எச்சரிக்கைக்கு பின்னால் வடக்கு பல்கலைக்கழகம் இருப்பதாக அந்த படப்பிடிப்பாளர்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

மேலே நாம் சொன்ன சிங்கப்பூரில் நடந்த நிகழ்ச்சியாகட்டும் யாழ்ப்பாணத்தில் முற்றவெளியில் நடந்த நிகழ்ச்சியாகட்டும் அடிப்படையில் ஒரே நோக்கத்தை உடையவை: பணம் சம்பாதிப்பது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் பல்வேறு உத்திகளை கையாள்கிறார்கள். சிங்கப்பூரில் உலகப் புகழ் பெற்ற ஒரு பாடகி, யாழ்ப்பாணத்திலோ இளையவர்கள் மத்தியில் பிரபலமான தென்னிந்திய நடிகைகள். அந்த நோக்கத்துக்காக தாம் சார்ந்திருக்கும் சமூகத்தின் நலன்களை பலியிட இந்த இரு நிறுவனங்களும் ஒரு நிமிடமேனும் சிந்திக்கவில்லை.

சிங்கப்பூர் ஆகட்டும் முற்றவெளி ஆகட்டும் பெரு வியாபார நிறுவனங்களின் ஒரே குறி பணம் சம்பாதிப்பது தான். அதற்காக அவர்களை எவரையும் பலியிட தயங்க மாட்டார்கள். முற்றவெளியில் தமிழ் இளையவர்கள் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் இளையவர்கள் மத்தியில் பிரபலமான தென்னிந்திய நடிகைகளை வரவழைத்து அந்த நிகழ்ச்சியூடாக பணம் சம்பாதிக்கும் நிகழ்ச்சிநிரலுக்கு அவர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். பின்னர் அங்கு நடந்த அசம்பாவிதங்களுக்கும் அவர்களே காரணம் என்று மேலதிக பழியும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்கவும்)

(24ஆம் பக்க தொடர்ச்சி)

எனவே நாங்கள் கலை பற்றி விளங்கி கொள்வது மிகவும் முக்கியமானது. உண்மையில் இந்த கலை நிகழ்ச்சி குழம்பி இருக்கின்றது. ஆனால் இதைவிட நாங்கள் பொங்கு தமிழ் நடத்தினோம். 2000 களில் நடந்த பொங்கு தமிழில் 60000 பேர் கலந்து கொண்டார்கள், 70000 பேர் கலந்து கொண்டார்கள் என்று எல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் 2003 களில் நடந்த பொங்கு தமிழில் மூன்று இலட்சம் பேர் கலந்து கொண்டதாக பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டது. அதிலே இவ்வாறான குழப்பம் ஏற்படவில்லை. அதிலே பெருமளவு இளைஞர்கள் கலந்து கொண்டார்கள். அண்மையில் நடந்த கலை நிகழ்ச்சியில் இரும்புக் கம்பிகள் பூட்டப்பட்டு உயரத்திலே இளைஞர்கள் ஏறி நின்றதைப் பார்த்தேன். இதைவிட பெரிய உயரத்திலே அன்று இளைஞர்கள் ஏறினார்கள். ஆனால் எந்த குழப்பமும் ஏற்படவில்லை. ஆகவே என்ன வித்தியாசம் இந்த இரண்டுக்கும் என்பதை நாங்கள் பார்க்க வேண்டும்.

தென்னிந்திய நடிகர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சி "யாப்னா" என்று விளம்பரப்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணம் என்று கூட இல்லை. இந்த யாப்னாவிற்கு உங்களுடைய கனவுக் கன்னி வருகிறார். இது கவனிக்கப்பட வேண்டிய விடயம். அதாவது இந்த கலை நிகழ்ச்சி என்பது கனவுக் கன்னியை காண்பதற்கான ஒரு நிகழ்ச்சி என்பது தான் அடிப்படை. ஆனால் பொங்கு தமிழ் அப்படி அல்ல. 2003 அந்த காலங்களில் நடந்த பொங்கு தமிழில் நாங்கள் பொங்கு தமிழுக்கு முதலில் மக்கள் மத்தியில் அவர்களை தயார்படுத்துவதற்கான சின்னச்சின்ன தெருவெளி அரங்குகளை நடத்தி இருந்தோம். அதிலே சங்கானையை சேர்ந்த 80 அல்லது 85 வயதுடைய பூதன் என்கின்ற ஒரு முதியவர் கூறுகின்றார், 'நாங்கள் கட்டாயம் அங்கு வருவோம். தேசத்தை கனவு காண அங்கு வருவோம்' என்று கூறுகிறார். ஆகவே பொங்கு தமிழ் என்பது உணர்வுகள் பொங்கி தேசத்தை கனவு காண்கின்ற ஒரு நிகழ்ச்சி. இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று நடந்தது கன்னியை கனவு காண்கின்ற நிகழ்ச்சி. அன்று நடந்தது தேசத்தை கனவு காண்கின்ற நிகழ்ச்சி. தேசத்தை கனவு காண்கின்ற போது கூட்டாக சேர்ந்து கனவு காணுதல், கூட்டாக சேர்ந்து தேசத்தை அமைத்தல் என்பது தான் அங்கே கொண்டாட்டமாக அமைகிறது.

அந்தமுறை பொங்கு தமிழில் இராணுவம் குடி கொண்டிருந்த வீடுகளை மீட்டல் அல்லது பாம்பு குடி கொண்டிருந்த வீடுகளை மீட்டல் என்பது தான் தொனிப்பொருளாக இருந்தது. அந்த மக்களிடம் கேட்கிறோம் 'இந்த வீட்டை மீட்பதற்கு நீங்கள் ஆதரவளிக்க தயாரா' என்று. அந்த வீட்டை பாம்புகள் சுற்றி இருக்கின்றன. அதிலே எங்கள் நிலம் எமக்கு வேண்டும் என்று பாடுகின்ற கோசமிடுகின்ற அந்த நேரத்திலே பெருவாரியான இளைஞர்கள் அந்த வீட்டிலே ஏறினார்கள். அந்த பாம்புகளை கழற்றி எறிந்தார்கள். அந்த வீட்டிலிருந்த பல விடயங்களை கழற்றி எறிந்தார்கள்.

பெருமளவு பெண்களும், ஆண்களும், இளைஞர்களும் கூடி ஆடி பாடுகின்ற ஒரு நிகழ்ச்சியாகத் தான் அந்த நிகழ்ச்சி இருந்தது. அதில் ஒரு கூட்டு மனப்பான்மை, நாங்கள் அனைவரும் இந்த தேசத்து மக்கள் என்பதாக தான் அந்த நிகழ்ச்சி இருந்தது. இலட்சக் கணக்கான மக்கள் பங்குபற்றினார்கள். எந்த அசம்பாவிதமும் வரவில்லை. அங்கே அறிவிப்பாளரின் சொல்லுக்கு இளைஞர்கள் பொங்கி எழுந்தார்கள் அதே நேரத்தில் அறிவிப்பாளரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு அமைதியாகவும் இருந்தார்கள். அவ்வாறு தான் அந்த நிகழ்ச்சி நடந்தது.

இது கலை பற்றிய புரிந்து கொள்ளலில் ஏற்படுகின்ற வேறுபாடு. தென்னிந்திய நடிகர்கள் இங்கே வந்து நடத்திய கலை ஒரு வகை. அது வெகுசன கலை என்று நாங்கள் சொல்லலாம். பொங்கு தமிழ் ஒரு மக்கள் கலை. இந்த இரண்டு கலைக்கும் உள்ள வித்தியாசத்தில் தான் இந்த பிரச்சனை வருகின்றது.

இன்று 2009 இன் பிறகு மக்கள் மத்தியில் இந்த வெகுசன கலைதான் பரப்பப்படுகிறது. மக்களின் சிறிய சிறிய ஆசைகளை தூண்டுகின்ற விதத்தில் நிகழ்ச்சியை நடத்துதல் தான் வெகுசன கலை. ஆங்கிலத்தில் இதனை Populist art என்று சொல்வார்கள். Populist என்றால் வெகுசன விருப்புகளை கொடுப்பது. அதாவது போதைவஸ்து தேவையென்றால் போதை

> யாழ்ப்பாணம் என்று சொன்னாலே அது ஒரு இசைக்கருவியின் பெயரோடு தான் வருகிறது. யாழ் இசைக்கருவியுடன் பாணன் பாடி தான் யாழ்ப்பாணத்தை பெற்றான் என்ற ஒரு கதை உண்டு. ஆகவே பண்டைய தமிழ் சமூகத்தில் ஆடியும் பாடியும் அவர்கள் தங்கள் தலைவனை கொண்டாடினர்கள்

வஸ்து கொடுப்பது, அவனுக்கு பாலியல் தேவையென்றால் பாலியலை கொடுப்பது. ஆகவே அவர்களுடைய சிற்றின்ப உணர்வுகளை தூண்டுகின்ற ஒரு கலை தான் வெகுசன கலை. இது இன்றைய நவீன ஊடகங்களுக்குள் பெரும்பாலும் வருகின்றது. முக்கியமாக சினிமா, தொலைக்காட்சி, YouTube இவைக்குள்ளால் வருகின்றது. உண்மையிலே மக்களுக்கு ஆடுவதிலும் பாடுவதிலும் விருப்பம் இருக்கிறது. கலையில் பங்குபற்றுவதில் விருப்பம் இருக்கிறது. ஆசை இருக்கிறது. இன்றைக்கு மட்டுமல்ல பண்டைத்தமிழர் சமூகத்தில் இருந்ததுவும் இதுதான்.

யாழ்ப்பாணம் என்று சொன்னாலே அது ஒரு இசைக்கருவியின் பெயரோடு தான் வருகிறது. யாழ் இசைக்கருவியுடன் பாணன் பாடி தான் யாழ்ப்பாணத்தை பெற்றான் என்ற ஒரு கதை உண்டு. ஆகவே பண்டைய தமிழ் சமூகத்தில் ஆடியும் பாடியும் அவர்கள் தங்கள் தலைவனை கொண்டாடினர்கள். எதிர்காலத்தையும் கட்டியமைத்தார்கள் என்பது பண்டைய வரலாறு. கலை என்பது மனிதர்களின் ஆற்றலை வெளிக்கொண்டு வருகின்ற ஒரு விடயம். அதற்கொரு முற்போக்கு அம்சம் இருக்கிறது. இன்றும் கூட ஊர்களில் சடங்குகளும் கூத்துகளும் உண்டு. மட்டக்களப்பு கிராமங்களில் சடங்கு உண்டு. சடங்கு என்பது மக்கள் ஒன்று கூடி ஆடுவதும் பாடுவதும் சமைத்து உண்பதுமான நிகழ்ச்சி தான். கெட்ட பேய்களை விலத்தி நல்ல தெய்வங்களை ஆடுவது என்பது தான் அந்த சடங்கின் சாராம்சமாக இருக்கின்றது. எனவே ஆடல் பண்டைய சமூகத்திலே இருந்தது. மக்கள் அதனை இன்றும் விரும்புகின்றார்கள்.

மறுபுறம் சினிமாவிற்கு வருவோம், நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் சினிமா பார்ப்பதற்கு எங்களை அனுமதிப்பதில்லை. என்னுடைய மாமனார் ஒருவர் இருந்தார் அவர் கோவில்களில் புராணக் கதைகளை படிப்பவர். அதற்கு பயன் சொல்பவர். அவர் எங்களை சினிமா பார்க்க விட மாட்டார். ஆனால் என்னை திருவிளையாடல் படம் பார்ப்பதற்காக கூட்டி சென்றார். இன்னொரு தடவை மகாபாரதம் படம் பார்ப்பதற்கு கூட்டி சென்றார். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட படங்களை தான் தமது பிள்ளைகளுக்கு காட்டுவார்கள்.

M.G.R சினிமாவினாலே முதலமைச்சராக வந்தார் என்று சொல்வோம். ஆனால் அவருடைய கலைக்கு ஒரு கொள்கை இருந்தது. முக்கியமாக அவர் படங்களில் மது அருந்த மாட்டார். பெண்கள் மீது பாலியல் சேட்டைகள் செய்ய மாட்டார். அவர் அதனை தொடர்ந்தும் சினிமாக்களில் பேணியதால் தான் அவரால் முதலமைச்சராக வர முடிந்தது. சினிமா ஊடாக அவர் பெற்ற பிரபல்யத்தினால் இறக்கும்வரை அவரை பதவியிலிருந்து இறக்க முடியவில்லை. அவர் பற்றிய விமர்சனங்கள் பல உண்டு. ஆனால் அவரின் கலையிலே கொள்கை இருந்தது. ஆனால் இன்று கலை வியாபாரம் ஆகிவிட்டது. அந்த வியாபாரத்திற்கு கண் இல்லை.

அன்று கோவில்களில் ஆங்காங்கே சின்ன மேளம் இருந்தது. அதற்கு எல்லோரும் போவதில்லை. ஆனால் இந்த நிலைமை தமிழர்களின் சுதந்திர போராட்டத்தோடு மாறியது. இந்த நச்சுக் கலைகள் இல்லாமல் போய் ஒரு மக்கள் கலை பரிணாமித்தது. அப்படித் தான் பொங்கு தமிழ் வந்தது. பெருமளவு மக்கள் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையில் தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் வடகிழக்கில் புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் பொங்கு தமிழ் ஒலித்தது. அதிலே ஒரு பாடல் உண்டு. "உயர்ந்தவர்கள்

நாம் எல்லோரும் உலகத் தாய் வயிற்று மைந்தர், நசிந்து இனிக் கிடக்க மாட்டோம், நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்.” என்ற பாடல் பெருமளவு ஒலிக்கப்பட்ட பாடல். இது அத்தகைய கலை. ஆடினார்கள் பாடினார்கள் ஆனால் 2009 இன் பின்னர் இந்த நிலை மாற்றப்படுகின்றது. நச்சுக்கலைக்கான பயிற்சி கொடுக்கப்படுகின்றது. இதைத் தான் நீங்கள் கவனிக்க வேண்டும்.

2009 பெரும் அழிவு ஏற்பட்ட போதும் பொங்கு தமிழ் இருந்தது. இன்றுவரைக்கும் இங்குள்ள கருத்துருவாக்கிகளாலோ ஊடகங்களாலோ இந்த விடயம் பெரிதாக பேசப்படுவதில்லை. 2009 இல் சம்பந்தன் பொங்கு தமிழை இல்லாமல் செய்கிறார். எவருக்கும் தெரியாமல் கரைக்கு ஒதுக்குகிறார். அப்போது ஏன் நீங்கள் அப்படி செய்கிறீர்கள் என்று அவரை சிலர் கேட்கிறார்கள். பொங்கு தமிழில் ஈடுபட்டவர்களை விட்டுவிட்டு ஏன் நீங்கள் கூட்டமைப்பை நடத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்கு அவர் சொன்ன பதில், ‘இரண்டு தரப்புகள் இவர்களை வேண்டாம் என்று சொல்கின்றன.’ அதிலே ஒரு தரப்பு தமிழர்களிடையே இருக்கின்ற வர்த்தகம் செய்பவர்கள். ஏனென்றால் வியாபாரிகளுக்கு தங்களுடைய குப்பையை கொட்டுவதற்கு ஒரு இடம் தேவை.

ஒரு மக்கள் கலை இருந்தால் தங்களுடைய குப்பைகளை இங்கே கொட்ட முடியாது. இவ்வாறு தான் மக்கள் கலை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தப்படுகிறது. அதற்கு அப்பால் இந்த நச்சுக்கலை சினிமாக்கள் கணக்கின்றி வருகின்றன. சினிமாவிலே நல்ல சினிமா இருக்கின்றது, அது வேறு. ஆனால் இன்று பல வியாபார சினிமாக்கள் மக்கள் மத்தியில் வருகின்றன. வெகுசன கலைக்கு இருக்கும் இன்னொரு அம்சம் அது விரைவாக பரவும். பல நடன பயிற்றுனர்கள் வருகின்றனர். அவர்கள் இந்த நடனங்களை இளைஞர்களுக்கு பழக்குகிறார்கள். இறுதியாக நடந்த நிகழ்ச்சி தொடர்பாக கடந்த வருட இறுதி மாதங்களில் ஒரு நடன பயிற்றுனர் இங்கே வருகிறார். அவரை ஒரு ஊடகர் கேட்கிறார், உங்களுடைய அருமையான நடனத்தின் சிறிய துண்டை ஆடி காட்டுங்கள் என்று. அவர் இடுப்பை அசைத்து ஆடி காட்டி இருக்கிறார். இதுதான் இவர்களால் பரப்பப்படுகின்ற ஆடல்.

மக்கள் ஆடலை விரும்புகிறார்கள் என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆடல் ஆற்றலை வளர்க்கும் என்ற கோட்பாடு இருக்கிறது. ஆனால் இவர்கள் இளைஞர்களுக்கு பரப்புகின்ற ஆடலின் அம்சங்கள் பாலியல் உணர்வுகளுக்கான ஆடலாக தான் அநேகமாக இருக்கின்றன. ஆகவே இது இளைஞர்களுக்கு பாலியல் உணர்வை தூண்டும். உடலை அவ்வாறு அசைக்கின்ற போது மனதிலும் அவ்வாறு வரும். அந்த உணர்வுகளை தூண்டும். இவ்வாறு தான் இளைஞர்கள் மத்தியில் நீங்கள் படிப்படியாக வளர்த்துவிட்டு கனவு கன்னியை கொண்டு வந்து நிறுத்துகிறீர்கள். கனவு கன்னியை அவ்வளவு தூரத்திலிருந்து பார்க்க முடியுமா? பாய்ந்தடித்து அருகில் வருகிறார்கள். அதனால் தான் இந்த குழப்பம் ஏற்பட்டது. கன்னியை கனவு காண்கின்ற நிகழ்ச்சி என்பதால் ஏற்பட்ட குழப்பமே தவிர இளைஞர்கள் பிழையானவர்கள் என்பதோ இங்கு அவ்வாறான ஒரு பண்பு இருக்கின்றது என்பதோ அர்த்தமில்லை.

நாங்கள் இளைஞர்களை சரியான கலையின்பால் வழிப்படுத்த வேண்டும். இந்த நச்சுக்கலைகளுக்கு கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும். கலைகள் பற்றிய விவாதம் வருவது நல்ல விடயம். அண்மையில் பண்பாடு பற்றிய விவாதம் கூட வந்தது. முக்கியமாக அறிவுஜீவிகளுக்கு அதில் தெளிவில்லை. அறிவுஜீவிகள் பொருளாதாரத்தை பற்றி கவலைப்படுவார்கள். அரசியலை பற்றி கவலைப்படுவார்கள். ஆனால் பண்பாட்டை பற்றியோ கலையை பற்றியோ கவலைப்படுவதில்லை. அதை யாரும் செய்யலாம் என்று நினைப்பார்கள். எல்லோருக்கும் தெரிந்த விடயமாக எடுப்பார்கள். உண்மையிலேயே அது பற்றிய ஆழமான விவாதங்களுக்கு நாங்கள் செல்ல வேண்டும்.

கலை பற்றிய படிப்பு கூட தேய்ந்த சக்கைப் படிப்பாக மாறிவிட்டது. ஏனென்றால் நிறுவனங்களில் எல்லாம் அதிகார ஆசை ஒரு பக்கம், மிகவும் கேடுகெட்ட சுயநலம் ஒரு பக்கம். இதன் காரணமாக எல்லாம் சீரழிந்து போகின்றன. எனவே இந்த பண்பாடு பற்றியும் கலை பற்றியும் நாங்கள் நல்ல விவாதங்களை முன்னெடுக்க வேண்டும். இவற்றுக்கு அப்பால்

நாங்கள் சிறுகச்சிறுக படிப்படியாக ஒரு மக்கள் கலையை உருவாக்க வேண்டும். மக்கள் ஒன்று கூடி ஆடுவதும் பாடுவதும் தமது எதிர்காலத்தை கற்பனை காண்பதுவும், பாரதி சொன்னது போல "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று.." அவ்வாறான ஒரு நிலையிலே ஆடுகின்றதும் பாடுகின்றதுமான ஒரு கலையை நோக்கி நாங்கள் பயணிக்க வேண்டும். அதற்கு சமூக அக்கறை உள்ளவர்கள் செயற்பாட்டாளர்கள் சேர்ந்து வர வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலை பற்றிய மாணவர்களிடமிருந்து தான் இந்த பொங்கு தமிழ் உருவானது. 2004, 2005 காலப்பகுதிகளில் சுனாமிக்கு ஆற்றுப்படுத்தல் கலையை செய்ததும் அந்த மாணவர்கள் தான்.

எனவே கலையை சரியாக புரிந்து கொண்டால் ஆற்றல் உள்ள சாதனமாக வலுவுள்ள கருவியாக நாங்கள் பயன்படுத்தலாம். அதற்கு முக்கியம் இந்த கலை என்றால் என்ன என்ற புரிதல். இன்று இளைஞர்கள் கலை என்றால் அவர்கள் இங்குள்ள கலைகள் சலிப்பை ஏற்படுத்தும் என்று நினைப்பார்கள். அவர்களை பிழை என்று சொல்ல முடியாது. தமிழ்நாட்டில் இருந்து கலைகள் வர வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு அதுவும் ஒரு காரணம். இங்கு நிகழ்ச்சிகள் கோவில் நிகழ்ச்சிகளாக இருக்கலாம், விழாக்களாக இருக்கலாம் அல்லது பண்பாட்டு பெருவிழாக்களாக இருக்கலாம் அவற்றை மக்களுக்கு ஆர்வம் வருகின்ற வகையிலே ஆனந்தப்படக் கூடிய வகையிலே சிற்றின்பத்தை விட பேரானந்தம் வரக் கூடிய வகையிலே அந்த நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும்.

சிலர் பாரம்பரியத்தை கொண்டு வருகிறோம் என்று சொல்வார்கள். அது இளைஞர்களுக்கு புதிதாக தோன்றுவதனால் ஒரு சில நிமிடங்களுக்கு அவர்களை கவருமே தவிர, அவர்களை ஆற்றுப்படுத்தும், அதுதான் சரியானது என்று சொல்ல முடியாது. அதனால் பாரம்பரியத்தில் இருந்து இன்றைக்கு உரியதாக நாங்கள் உருவாக்க வேண்டும். எனவே எங்களுடைய நிகழ்ச்சிகளை மக்களை கவரக் கூடிய வண்ணம் நடத்துகின்ற அளவுக்கு நாங்கள் தெளிவு பெற வேண்டும். இங்கே இளைஞர்களை நாங்கள் குறை சொல்ல முடியாது. அவர்கள் வேகமானவர்கள். அழகான கவருகின்ற நிகழ்ச்சிகளை நோக்கி ஓடுகின்றார்கள். அந்த வகையிலே, ஒரு பக்கம் நிறுவனங்களால் சலிப்பேற்றும் நிகழ்ச்சிகள், மறுபக்கம் கலையை கற்பிக்கும் நிறுவனங்கள் செயலிழந்து போன நிலைமை. ஒப்புக்காக சில கலைகளை கற்பித்து கொண்டிருக்கிறார்கள். அதனூடாக நல்ல வல்லமையான கலைஞர்கள் வெளி வருவதில்லை.

இந்த நிலையில் சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் கலை பற்றிய புரிந்துணர்வை உருவாக்குவதற்கான நிறுவனங்களை அமைக்க வேண்டும். நாங்கள் ஒரு பண்பாட்டு மையத்தை அமைத்து வைத்திருக்கிறோம். அங்கு இளையோர்கள், மக்கள் அனைவரும் வருகிறார்கள் அவர்கள் கலை பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நாங்கள் தமிழ்நாட்டு நண்பர்களோடும் தொடர்பு கொண்டோம். உண்மையில் அவர்களுக்கு யாழ்ப்பாணம் பற்றிய பெரிய மதிப்பு இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசுவது மிக அழகாக உள்ளது, இசை போல் உள்ளது என்று சொல்வார்கள். ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் பேசுகின்ற தமிழை கூட மாற்றி வருகின்றார்கள். எனவே அங்குள்ள பல கலைஞர்கள் எங்களோடு ஒத்துழைப்பதற்கு தயாராக இருக்கின்றார்கள். நாங்களும் அந்த ஒத்துழைப்பை கோரி நிற்கின்றோம். இது மட்டுமல்ல புலம்பெயர்ந்த தமிழர்களையும் ஈடுபடுத்தி மூன்று பகுதிகளும் இணைந்து பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் பெருமளவு மக்களை கவரக் கூடிய ஒரு கலை நிகழ்ச்சியை நாங்கள் உருவாக்க வேண்டும்.

இவ்வருடத்தின் நடுப்பகுதியில் நாங்கள் அவ்வாறான ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும். பெருமளவு மக்கள் கூடுவதும் அதிலே அவர்கள் ஆடிப்பாடி மகிழ்வதும் ஓர் பேரானந்த நிலையை அடைவதும் அதன் மூலம் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்ப்பதும், தங்கள் எதிர்காலத்தை கனவு காண்பதும், கட்டியமைப்பதும் அதற்கான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு தீர்மானம் எடுப்பதுமான ஒரு பெரும் கலை நிகழ்வை நாங்கள் உருவாக்க வேண்டும். இப்போதிருந்தே படிப்படியாக நடத்திக் கொண்டு சென்று பெருமளவு மக்கள் கூடுகின்ற நிகழ்வாக நடத்த வேண்டும் என்பது தான் எங்களுடைய ஆசை. அதை நடத்துவோம்.

# மக்கள் கலையை நோக்கி பயணிப்போம்



கலாநிதி க.சிதம்பரநாதன்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய நடிகர்கள் வந்து நிகழ்த்திய ஒரு இசை நிகழ்ச்சி சம்பந்தமாக பலத்த விவாதங்கள் எங்கள் மத்தியில் முக்கியமாக சமூக ஊடகங்கள் மத்தியில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. விவாதங்கள் வருவது நல்ல விடயம். ஒரு புறத்தில், இந்த நிகழ்ச்சி குழப்பப்பட்டிருக்கின்றது, இளைஞர்கள் ஒரு பண்பாட்டு சீரழிவோடு நடந்திருக்கின்றார்கள் என்று இளைஞர்களை குற்றம் சாட்டுகிறார்கள். மறுபுறம் இது ஏற்பாடு செய்யப்பட்ட விதத்திலுள்ள தவறின் காரணமாக தான் இந்த நிகழ்ச்சி குழப்பப்பட்டிருக்கிறது போன்ற விவாதங்கள் வெளிவருகின்றன. உண்மையில் இவை இரண்டுமே முழுமையான விளக்கங்கள் அல்ல. அரைகுறையான திரிபுபட்ட விளக்கங்களாகத் தான் கொள்ளலாம்.

நான் இன்னொன்றை கூட பார்த்தேன். சில இளைஞர்கள் ஏன் எங்களை குறை கூறுகிறீர்கள் என்று உணர்வுபூர்வமாக கேட்கின்றனர். அந்த குரலையும் நாங்கள் கேட்கத் தான் வேண்டும். முக்கியம் என்னவென்றால் கலை பற்றிய விளக்கம், கலை நிகழ்ச்சி பற்றிய அறிவு எங்கள் மத்தியில் போதியளவு இல்லாதது தான் இதற்குரிய ஓர் அடிப்படைக் காரணம். ஏனென்றால் இன்று கலையை ஒரு பண்டமாக வியாபாரப் பொருளாக மட்டும் தான் நாங்கள் கருதுகிறோம். திரிபுபட்ட விளக்கத்தின் காரணமாக தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

(20ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 29.02.2024 அன்று வெளியிடப்பட்டது.